
GOKULAM
ஜூன் 2010 ◆ 80 பக்கங்கள் ◆ விலை ரூ.8/-
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!
ங்களும் சாகஸம்
செய்யலாம்...
அழ.வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டி


கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1626


1627


1628


1629


1630


1631


1632


1633


1634


1635


1636


1637


1638


1639


1640


1641


1642


1643


1644


1645


1646


1647


1648


1649


1650

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

ஜூன் 2010 மலர் : 28 இதழ் : 5

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

கோடை தந்த கொடை!

டியர் குட்டீஸ்,

கிராமத்தில் உள்ள தாத்தா வீட்டுக்குப் போய், ஆலமர விழுதைப் பற்றித் தாவிக் கண்மாய் நீரில் குதித்தீர்களா? பனைமரங்களின் உச்சியில் தொங்கும் தூக்கணாங் குருவியின் கூடுகளில் கீச்சொலியைக் கேட்டீர்களா? கிச்சுக் கிச்சு தாம்பாளம், பல்லாங்குழி, கல்லாங்காய், நொண்டி... என்று நிழலில் அமர்ந்து விளையாடி மகிழ்ந்தீர்களா?

கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு என்று உல்லாசப் பயணம் போனீர்களா? அல்லது 'தீம்பார்க்'குகளில் வலம் வந்து சந்தோஷப்பட்டீர்களா?



இவை எதையுமே செய்யவில்லை என்றாலும், பள்ளி நண்பர்களுடன் திரைப்படம் பார்த்தும், பார்க்கில் விளையாடியும், மைதானத்தில் கொளுத்தும் வெயிலில் கோலாகல கிரிக்கெட் ஆடியும் உற்சாகம் கண்டீர்களா?

இவையெல்லாம் எதற்காக?

இனிவரும் ஓராண்டு முழுவதும் உங்கள் கவனம் ஒருமுகப்பட வேண்டும் என்பதற்காக! படிப்பில் கவனம் செலுத்திய மனத்தை, சற்றே தளர்த்தி, உற்சாகப்படுத்தி, மீண்டும் கற்பதில் முனைப்பு பெறச் செய்யத்தான் இந்தக் கோடை விடுமுறை!

மன்னர்கள் முன்காலத்தில் வள்ளல்தன்மையுடன் வாரி வழங்கியதை 'கொடை அளித்தான்' என்று சொல்வார்கள். கொடையைப் பெற்றுப் பயனடைந்தவர்கள் மேலும் உற்சாகத்துடன் உழைப்பர். கோடைவிடுமுறை என்பது மாணவர் சமுதாயத்துக்கான இன்பக் கொடை! இப்படிப் புரிந்து கொண்டால், இந்த ஆண்டுக் கல்வியும், நமக்கு மிகப் பெரிய கொடையாக இருக்கும்.

அன்புடன்,

கோகு



''தலைக்கு டூத்பேஸ்ட் தேய்த்துக் குளிச்சா என்னாகும்?

''ஈறுகள் நன்றாக வளரும்.''



டாக்டர் : நீங்க என்ன வியாபாரம் பண்றீங்க?

நோயாளி : புண்ணாக்கு வியாபாரம்.

டாக்டர் : சரி, நாக்குல என்ன பிரச்னை உங்களுக்கு?

நோயாளி : புண்.... நாக்கு!

– பி.பரத்,
சிதம்பரம்

கடிக்காத வால்!

அம்மா : நாய் வாலைப் பிடிச்சு இழுக்காதேடா! அது கடிக்கும்.

பையன் : வால் எப்படிம்மா கடிக்கும்?

– ஏ.சுலைஹத் ஃபைஹா,
உ. எண் 998, கீழக்கரை






''பாம்பு யாருக்கு போன் பண்ணிப் பேசினாலும், அது இன்னொரு பாம்புக்குத் தெரிந்து விடும். எப்படி?''

''தெரியலையே?''

''அதான் பாம்பின் கால் பாம்பறியும் பழமொழியிருக்கே!''



ராம் : என்ன, அந்த அலுவலகத்தில் நிறைய காக்கைகள் உட்கார்ந்திருக்கு...?

சோமு : அது 'கிளை' அலுவலகம்.

- எஸ்.தணிகைவேல்,

உ. எண் 762, காஞ்சிபுரம்

நோயாளி : டாக்டர்! நீங்க போன தடவை கொடுத்த மருந்துச் சீட்டுக்கு 1000 ரூபாய் மருந்து செலவு ஆயிடுச்சு. இந்த தடவை குறைச்சலா போடுங்க.

டாக்டர் : அய்யய்யோ! போன தடவை நான் மருந்தே எழுதித் தரலை. பேனா எழுதுதான்னு நான் கிறுக்கிப் பார்த்த சீட்டை எடுத்துட்டு போயிட்டியா..!

- த.பிரகல்யா, உ. எண் 318,

தஞ்சாவூர்



கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888

தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு : 044 - 4343 8822

tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு : 044 - 4343 8811

marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு : 044 - 4343 8833

subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு : 044 - 4343 8844

sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ...

www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :

உள்நாடு : ரூ.96/-

வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!





ப்ரியன்

> **சில நாட்கள் மட்டுமே கற்றுக்கொண்டு, உடனே சாலையில் டு வீலர்களுக்குப் போட்டியாகச் சிலர் விரைகிறார்கள். இது மிகவும் ஆபத்து!**

சென்னை கே.கே. நகர் பகுதியிலுள்ள சிவன் பூங்கா! யோகாசனம் செய்து கொண்டிருப்பவர்கள், வேர்க்க விறு விறுக்க ஜாகிங் செய்பவர் கள் என்று சுறுசுறு சூழல். ஓரமாக உள்ள மொசைக் போட்ட ஸ்கேட்டிங் பயிற் சித் தளத்தில், நான்கு வயது முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள குட்டீஸ்கள் சக்கரக் காலணியோடு முகத் தில் சாகசம் பொங்க, சர், சர்ரென்று சறுக்கிக் கொண்டு செல்கின்றனர். நான்காவது படிக்கும் திவ்யா "ரொம்ப ஜாலியா இருக்கு" என்றவாறு வேகத்தைக் கூட்டு கிறாள். திவ்யா மட்டுமல்ல; சென்னை யில் ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர், சிறுமிகளுக்கு ஸ்கேட்டிங் பயிற்சி கொடுக்கிறார் விஜய். ஸ்கேட்டிங் வட்டாரத்தில் இவரைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது.



நீங்களும் சாகஸம் செய்யலாம்...



★ விஜய்

"நான் கொடைக்கானலில் படித்தேன். அங்கே பள்ளியில்தான் முதலில் எனக்கு ஸ்கேட்டிங் அறிமுகமாயிற்று. அதன்மீது ஈடுபாடு அதிகமானது. தீவிரமாகப் பயிற்சி செய்து, மாநில அளவில் போட்டிகளில் வெற்றி பெற்றேன். கல்லூரிப் படிப்பை முடித்தபிறகு, ஸ்கேட்டிங் பயிற்சியையே தொழிலாக எடுத்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது. இதில் இறங்கி விட்டேன்" என்கிறார் விஜய்.

ஸ்கேட்டிங்கில் துவக்க காலப் பயிற்சி என்பது பேலன்ஸ் பண்ணக் கற்றுக் கொள்வதுதான். சைக்கிள் கற்றுக் கொள்ளும்போது பல தடவை விழுந்து எழுந்துதானே கற்றுக் கொள்வோம். அதுபோலத்தான் ஸ்கேட்டிங்கும். விஜய்யின் ஸ்கேட்டிங் வகுப்புகள் வருடம் முழுவதும் உண்டு. ஆனால் கோடை விடுமுறையின்போதுதான் நிறையக் குழந்தைகள் சேருவார்கள். "குழந்தைகளுக்கு ரொம்ப த்ரிலிங்கா இந்த விளையாட்டு இருக்கு. அதிகம் செலவு கிடையாது. நடுத்தரக் குடும்பங்களில் இதற்குச் செலவழிக்கப் பிரச்னை இருக்காது" என்றார் மகள் சுமதியை ஸ்கேட்டிங் பயிற்சியில் விட்டுவிட்டு வாக்கிங் போய்க் கொண்டிருந்த ஹேமா.

பதினைந்தே நாட்களில் இதைக் கற்றுக் கொள்ளலாம். இரண்டு மூன்று நாள் பயிற்சியிலேயே ஆர்வக் கோளாறால் வேகமாகச் செல்ல முயற்சிக்கிறார்கள் குழந்தைகள். அதனால் தடுமாறி விழுகிறார்கள். "தலையில் ஹெல்மெட், கை, கால் முட்டிப் பகுதிகளுக்கு பாதுகாப்பு கவசம் அணிந்திருந்தாலும் எங்கள் பயிற்சியாளர்களின் கண்காணிப்பு எப்போதும் இருக்கும்" என்கிறார் விஜய்.

இவருக்குத் தனி வலைத்தளம்

இருக்கிறது. மின்னஞ்சலில் இவரைத் தொடர்பு கொண்டு கற்றுக் கொள்ளும் ஆர்வத்தைச் சொன்னால், பாடங்களையும் படங்களையும் அதன் மூலமாகவே அனுப்பி விடுகிறார்.

அடிப்படையாக பேலன்ஸ் செய்யக் கற்றுக் கொண்டுவிட்டால், பின்னர் உங்கள் வீட்டுக் கார் ஷெட்டிலோ அல்லது, காலியான சாலையிலோகூடப் பயிற்சி செய்யலாம். சில சிறுவர்கள் சில நாட்கள் மட்டுமே கற்றுக் கொண்டு, சாலையில் டூ வீலர்களுக்குப் போட்டியாக சக்கரம் கட்டி விரைகிறார்கள். இது மிகவும் ஆபத்து!


ஏனென்றால், ஆடுகளத்தில் ஸ்கேட்டிங் செய்வதற்கும், சாலையில் செய்வதற்கும் வெவ்வேறு பயிற்சி முறைகள் உள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

‘சென்னையைத் தவிர இரண்டாம் கட்ட நகரங்களான மதுரை, கோவையில் கூட ஸ்கேட்டிங் இன்னமும் சரியாகக் குழந்தைகளைச் சென்றடையவில்லை என்பது இவரின் வருத்தம்.



“இன்னும் பத்து ஆண்டுகளுக்குள், சென்னையில் பத்து வயதுக்குட்பட்ட எல்லா சிறுவர்களுக்கும் ஸ்கேட்டிங் தெரிந்திருக்க வேண்டும். இதை நோக்கியே என் பயணம்” என்கிறார்.

சென்னையில் பேட்டைக்குப் பேட்டை ஆடுகளம் அமைக்க, மாநகராட்சியை இவர் வலியுறுத்திக் கொண்டும் இருக்கிறார். ஸ்கேட்டிங் காலணிகளின் விலை அதிகபட்சம் எழுநூறு ரூபாய் தானாம். சைனா தயாரிப்பு என்றால், இன்னும் சற்று மலிவு. அப்புறமென்ன? ஜமாய்க்க வேண்டியது தானே? ●



உங்களுக்கும் ஆர்வமிருக்கா குட்டீஸ்..

கோகுலம் வாசகர்களுக்காக இலவசமா ஸ்கேட்டிங் சொல்லித்தர விரும்புகிறார் விஜய். ஒரே ஒரு நிபந்தனைதான். இந்தக் கட்டுரை வெளிவந்த கோகுலம் மாத இதழோடு அவரைச் சந்திக்கணும்; அவ்வளவுதான். அவரை எப்படித் தொடர்பு கொள்வது? இதோ அவரோட மின்னஞ்சல் முகவரி :

skatingvijay@gmail.com

உங்கள் கவனத்துக்கு!



● சிறுவர் சங்க உறுப்பினராவதற்கு, குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● கொடுக்கப்பட்டுள்ள கோகுலம் சிறுவர் சங்கக் கூப்பனை (பக்கம் 67) நிரப்பி, **புகைப்படத்தை இணைத்து** அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் **புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள்.** புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

● உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிடப்படும் எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!

● முதல் வகுப்பு தொடங்கி, மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது, உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● **ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள், மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**

● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**

● **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.


ஆசிரியர், கோகுலம்


47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32


ஆதி
கதை, படம் : பிள்ளை
ஆதி, ரொம்ப போரடிக்குதே! என்ன பண்ணலாம்?
ம்... இந்தக் காட்டைச் சுத்திப் பார்த்தா என்ன?
சூப்பர் ஐடியாடா ஆதி.
ஊர்ந்து போய் காட்டைச் சுத்திப் பார்க்குறது இந்த ஆதிக்கு அவமானம்.
யார் மேலயாவது சவாரி செய்து காட்டை ரவுண்ட் அடிப்போம்.
மாட்டினான் ஒரு மாங்கா மடையன்.
எப்படி இருக்குற கஜா?
இதுவரை நல்லாத்தான் இருக்கேன்.



சரி, விஷயத்துக்கு வர்ரேன். இப்போ ஒரு போட்டி. அதுல நீ தோத்தா, இந்தக் காட்டை எனக்கு சுத்திக் காட்டணும்.
போட்டி என்னன்னா...
...எனக்கு தெரிஞ்சு போச்சு.
உன்னைப்போல புத்துக் குள்ள புகுந்து வெளில வர முடியுமான்னு கேட்கப்போற...
ஆமாம்.
என் தோல்வியை ஒத்துக்கறேன். வா காட்டைச் சுத்திக் காட்டறேன்.
போட்டி துவங்கும் முன்பே ஜெயிச்சுட்டியேடா ஆதி...
என்ன ஆதி, காடு தெரியுதா, நல்லா சுத்திப்... பாரு.
ம்... எல்லாரும் வெவரமாத்தான் சுத்துரானுங்க.





முனைவர் ஆசுரா



விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனை சோவியத் யூனியனைச் சேர்ந்த வாலண்டினா தெரஸ்கோவா (Valentina Tereskhova). இவரின் பெற்றோர் விவசாயம் செய்து வந்தனர். வாலண்டினா வேலைக்குச் சென்று கொண்டே மாலையில் படிப்பைத் தொடர்ந்தார். நீச்சல், நீர்ச்சறுக்கு, பேட்மிண்டன் போன்ற போட்டிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்றார். பாராசூட்டில் இருந்து குதிப்பது, இவருக்குப் பிடித்தமான வீர விளையாட்டு. விளையாட்டுத் திறனும், உடல் ஆரோக்கியமும் விண்வெளிக்குச் செல்லும் வாய்ப்பை இவருக்கு வழங்கின. ஜூன் 16, 1963ஆம் ஆண்டு, விண்வெளிக் கப்பல் வோஸ்டாக் 6-ல், பூமியை 48 முறை வலம் வந்தார் வாலண்டினா.

யார் ஃபர்ஸ்ட்?

சூரிய ஒளி - நிலவொளி இரண்டுக்கும் போட்டி வைச்சா யார் ஜெயிப்பா? வெயில் கொளுத்துறதைப் பார்த்தால், சூரிய ஒளிதான் ஜெயிக்கும்னு தோன்றலாம். ஆனால், ஜெயிக்கிறது நிலவொளிதான். நிலவொளி பூமியை அடைய ஆகும் நேரம் 1.3 விநாடி. ஆனால், சூரிய ஒளி பூமியை அடைய 8.2 நிமிடம் ஆகும். இதற்குக் காரணம், பூமிக்கும் நிலவுக்கும் உள்ள தூரம் மிகக் குறைவு. அதே போலக் கடலில் அலைகள் ஏற்படுவதற்கும் நிலவின் ஈர்ப்பு விசைதான், பெரும் பங்காற்றுகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

முதல் செயற்கைக் கோள்!

இந்தியாவின் முதல் செயற்கைக் கோள்



பூமியைச் சுற்றி 48 முறை!

* வாலண்டினா தெரஸ்கோவா

ஆரியபட்டா. சோவியத் யூனியன் துணையோடு, 1975ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்டது. இதை உருவாக்கும் பணியில் இந்திய விஞ்ஞானிகள் முழுமையாக ஈடுபட்டனர். 'வெறும் ஆறு மாதங்களே விண்வெளியிலிருந்து சமிக்ஞைகள் அனுப்பும்' எனக் கருதப்பட்ட ஆரியபட்டா, சுமார் ஆறு ஆண்டுகள் தன் பணியைச் செய்தது. 1500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கணித மேதை, ஆரியபட்டரின் நினைவைப் போற்றும் வகையில், இந்தக் கோளுக்கு 'ஆரியபட்டா' எனப் பெயரிடப்பட்டது.

விண் ஆய்வுக் கூடங்கள்

அமெரிக்காவின் நாசா ஆய்வு மைய விஞ்ஞானிகள் உருவாக்கிய அற்புதம், விண் ஆய்வுக்கூடம். 1973ஆம் ஆண்டு 'கேப் கென்னடி' ஏவு தளத்தில் இருந்து, இந்த விண் ஆய்வுக்கூடம் ஏவப்பட்டது. 'எடையற்ற நிலையில் மனிதன் எவ்வாறு வாழமுடியும்? சூரியனின் மேற்பரப்பின் தன்மை என்ன?' போன்ற பல்வேறு ஆய்வுகளை இது மேற்கொண்டது. பின்னர், இந்த ஆய்வுக் கூடத்துக்கு பால் வெயிட்ஸ், சார்லஸ் கான்ராட், டாக்டர் ஜோசப் கெர்வின் என்னும் மூவர் அப்பல்லோ விண்கலம் மூலமாக அனுப்பப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து எலி, சிலந்தி, மீன் போன்றவற்றை விண் ஆய்வுக்கூடத்துக்கு ஆராய்ச்சி செய்ய எடுத்துச் சென்றனர். இங்கிலீஷ் படத்துல பாக்கற மாதிரி, ஆராய்ச்சிக் கூடத்துல, எலி டைனோஸர் அளவுக்கு வளந்துட்டா... யப்பா, நினைக்கவே பயம்மா இருக்குல்லே!

விரட்ட விரட்ட, மீண்டும் தன் வயலில் நுழைந்த எருமையைப் பார்த்தான் தருமன். கஷ்டப்பட்டுத் தான் வளர்த்த பயிர் அழிக்கப்படுவதைப் பார்க்கப் பார்க்கக் கோபம் பொங்கியது அவனுக்கு. அவன் வளர்த்த வானம்பாடி வேறு பேசியது. "எருமையே, ஓடிப்போ, தருமனுக்கு கோபம் வந்துவிட்டது.''

ஆனாலும் எருமை விலகவில்லை. மீண்டும் வயலுக்குள் நுழைந்தது. அருகே வைத்திருந்த பெரிய அரிவாளை எடுத்து வீசினான் தருமன். அது மிகச் சரியாக எருமையைத் தாக்கி வீழ்த்தியது. கீழே விழுந்த எருமை பரிதாபமாக அலறி உயிர்விட்டது. தருமன் பயந்தான். அந்த எருமையை இழுத்துச் சென்று வைக்கோல் போரினுள் மறைத்தான்.

மறுநாள்...

எருமையைக் காணாமல் தேடிய அதன் சொந்தக்காரன் வேலன், தருமனிடம் கேட்டான். 'நான் பார்க்கவேயில்லை' என்றான் தருமன். ஆனால், 'தருமன்தான் அரிவாளை வீசிக் கொன்றான்' என்றது வானம்பாடி. அதன்பிறகும் தருமன் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால், தருமனை ஊர்ப் பஞ்சாயத்தில் நிறுத்தினான் வேலன். ''நான் சொன்னதற்கு சாட்சி வானம்பாடிதான்'' என்றான். வானம் பாடியைக் கொண்டுவரும்படி ஆணை யிட்டனர் பஞ்சாயத்தார்.

அன்றிரவு...

வானம்பாடியின் கூண்டை துணியால் மூடினான் தருமன். தகர டப்பாவில் 'தடதட' என்று ஒலி எழுப்பினான். அடுத்தடுத்து




தீக்குச்சிகளைக் கொளுத்தினான். தண்ணீரை எடுத்து துணி மூடிய கூண்டின் மேல் சிதறினான். நெடுநேரம் சென்றபின், தூங்கப் போனான்.

அடுத்த நாள் பஞ்சாயத்தில் 'இந்த வானம்பாடி பேசுவது உண்மை என எப்படி அறிவது?' என்றார்கள் பலரும். உடனே தலைவர், 'நேற்றிரவு நடந்ததைச் சொல்' என்றார் அந்த வானம்பாடியிடம். அதற்கு, ''அப்பப்பா பயங்கர இடி... எவ்வளவு மின்னல்... என்ன ஒரு மழை!'' என்றது வானம்பாடி, கூடியிருந்த அனைவரும் 'நேற்றிரவு மழையா' என்று சொல்லிச் சிரித்தனர். அப்போது தருமன்,

ஹாஜா தவ்பீக், பத்தாம் வகுப்பு, எல்.கே. மேல்நிலைப் பள்ளி, காயல்பட்டினம்

நாடோடிக் கதை



கிளிப் பேச்சு!



"மனிதன் நான் சொல்வதை நம்பாமல், இந்தப் பறவை சொல்வதை நம்பினால் இப்படித்தான்'' என்றான் கேலியாக.

தருமன் குற்றவாளியல்ல என்று விடுவித்தது பஞ்சாயத்து. ஆனால், தருமனோ 'இந்த வானம்பாடி உயிருடன் இருந்தால் ஆபத்து' என்று நினைத்தான். வெளியே வந்தவுடன், கூண்டைத் திறந்து அதைப் பிடித்துக் கொல்ல முயன்றான். அவனுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்ட வானம்பாடி, சரேலென்று அவன் கைகளில் இருந்து நழுவிப் பறந்தது.

வேகமாகப் பறந்து வந்த வானம்பாடியைப் பார்த்தன மரத்தில் இருந்த சில கிளிகள். அவை, 'எதற்குப் பயந்து இப்படிப் வேகமாகப் பறந்து வருகிறாய்?'' என்றன.

"கிளிகளே.. மனிதர்களின் பொய்மையைக் கண்டு அஞ்சிப் பறக்கிறேன். மறந்துகூட அவர்கள் முன் உண்மையைப் பேசாதீர்கள். அவர்கள் சொல்லித் தருவதைச் சொன்னால் மட்டுமே, அவர்கள் விரும்புவார்கள். அவர்களிடம் ஜாக்கிரதையாய் இருங்கள்'' என்றபடியே சிறகடித்துப் பறந்தது வானம்பாடி.

அதனால்தான், கிளிகள் நாம் சொல்லித் தருவதைத் தவிர, வேறெதையும் பேசுவதில்லை!

(இது தாய்லாந்து நாட்டில் சொல்லப்பட்டு வரும் கதை!)

மொத்தப் பரிசுத் தொகை ரூ.2000/-

முதல் பரிசு — **ரூ.1000/-**
இரண்டாம் பரிசு — **ரூ.500/-**
மூன்றாம் பரிசு — **ரூ.500/-**
(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள் :

✱ இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாகப் படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைத் தவறாமல் குறிப்பிட வேண்டும்.



✱ கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனைதான் என்ற உறுதிமொழி கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.

✱ பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் தலைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

✱ அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்!

✸ போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழ்களுக்கு அனுப்பக்கூடாது.

✸ போட்டி முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.

முடிவுத் தேதி : 31.8.2010

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம்,
அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

நினைவுச் சிறுகதைப் போட்டி 2010

கதைப்பாடல்



சிறகிருக்க சிறை எதற்கு?

கிளி :
சின்னத் தம்பி நீயுமே
சிரித்துக்கொண்டே பார்க்கிறாய்!
உன்னைப் படைத்த இறைவனால்
உனக்கு அழகாய்த் தெரிகிறேன்!

உண்ண உணவு தேடுவேன்;
உள்ளம் குளிரப் பாடுவேன்;
கண்ணைக் கவரும் பசுமையில்
களிப்பு கொண்டு சேருவேன்

தம்பி :
பச்சைக் கிளியே பச்சைக் கிளியே
பாலும் பழமும் தருவேனே
இச்சை கொண்ட தின்பண்டம்
எல்லாம் உனக்குத் தருவேனே

தச்சர் செய்த சிறுகூண்டில்
தங்கி வாழத் தடையென்ன?
அச்சம் வேண்டாம் அருகில்வா;
அன்பாய்க் காப்பேன் நானுன்னை!

கிளி :
பாலும் பழமும் தந்தென்ன?
பரிவாய்ப் பேசிப் பயனென்ன?
காலும் சிறகும் நான் பெற்ற
காரணம் என்ன அறிவாயா?

சிறகுகள் இருக்கக் கூண்டென்னும்
சிறைக்குள் நானும் வாழ்வேனோ?
பறப்பேன் எங்கும் மகிழ்வாக;
பரவசம் கொண்டே சுகமாக!

- **எஸ். வஜ்ரவேலு**



தேடி வரும் கோகுலம்; படிக்கப் படிக்க குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



உயருங்கோ!

காக்கா காக்கா பாருங்கோ
கரைந்து அழைப்பதைக் கேளுங்கோ
தூக்கணாங் குருவி பாருங்கோ
தூளியில் பாடுது கேளுங்கோ

சிட்டுக் குருவியைக் காணுங்கோ
சிட்டாய்ப் பறக்குது பாருங்கோ
பட்டுக் கிளியப் பாருங்கோ
பண்பாய்ப் பேசுது கேளுங்கோ

தோகை விரிக்கும் மயிலுங்கோ
தகதிமி ஆடுது பாருங்கோ
சோகம் தீர்க்கக் குயிலுங்கோ
பாடும் அழகைக் கேளுங்கோ.

பறக்கும் புறாவைப் பாருங்கோ
பழகும் அமைதியைக் கேளுங்கோ
வெளுத்த வெள்ளைக் கொக்குங்கோ
விரையும் அழகைக் காணுங்கோ.

பறவைகள் பறக்கும் அழகுங்கோ
பார்த்து மகிழ்ந்தால் நலமுங்கோ
பறந்து வாழ்வில் வளருங்கோ
பண்பை வளர்த்து உயருங்கோ

- ஆறு. கதிரவன்,
பாதரக்குடி



திரும்ப வராதவை..!

தொலைந்து போன பொருளினைத்
தேடிக் கண்டு பிடிக்கலாம்
அலைகள் மோதும் கடலிலே
அள்ளி மண்ணை எடுக்கலாம்

கிணற்றில் ஊறும் நீரினைக்
குடத்தைக் கட்டி எடுக்கலாம்
பணத்தைக் கொண்டு உயரிய
பொருட்கள் யாவும் வாங்கலாம்.

இழந்த செல்வம் உழைப்பினால்
இனிதே மீட்டுக் கொள்ளலாம்
முகட்டில் மறையும் சூரியன்
கிழக்கில் மீண்டும் மின்னுவான்!

வீசிச் செல்லும் தென்றலும்
விரைந்து நாளை திரும்பிடும்
நின்று வீழும் செடிகொடி
நிமிர்ந்து நாளை உயர்ந்திடும்

நா மொழிந்த சொற்களும்
நகருகின்ற நாட்களும்
நாளை மீள்வதில்லையே! - இதை
நாமுணர்தல் நன்மையே!

- அழகனார்,
கோழிக்கோடு



குளியல் வேளை!

குட்டிக் குழந்தை குளியல் அறையில்
அட்ட காசம் பண்ணுது!
எட்டிப் பிடித்துக் குழாய் திறந்து
கொட்டும் நீரில் குளிக்குது!

பக்கெட் உள்ளே இறங்கி நின்று
'தக் தக்'கென்று குதிக்குது!
முக்கு ளித்து வாளித் தண்ணீர்
முழுதும் கொட்டிக் கவிழ்க்குது!

சுட்டித் தனமாய் விழித்து கையைத்
தட்டிக் கொட்டிச் சிரிக்குது!
கட்டிச் சோப்பைக் கரைச்சு குமிழி
தொட்டுத் தொட்டுப் பார்க்குது!

அள்ளி அள்ளி சோப்பு நுரையை
அம்மா முகத்தில் தேய்க்குது!
கொள்ளை நுரையும் அம்மா வுக்கு
வெள்ளைத் 'தாடி' யாகுது!

துவட்டும் துணியைக் காணோம், அம்மா
அதட்டிக் கேட்டுத் தேடினால்
தவலைப் பானைத் தண்ணீ ருள்ளே
துவாலை நீச்சல் அடிக்குது!

கொஞ்சம் கோபம்! நிறையச் சிரிப்பு!
கொஞ்சுகின்றாள் அம்மாவும்
அஞ்சு நிமிஷக் குளியல் வேளை
நெஞ்சு நிறைஞ்சு பொங்குது!

- நெ.சண்முக வேலாயுதம்,
சென்னை

பனிபடர்ந்த தென் துருவப் பகுதியில் தனி ராஜாங்கம் நடத்துபவை பெங்குவின்கள்! அண்டார்க்டிக் பகுதியில் பெருமளவில் இவை வாழ்கின்றன. என்றாலும், சில சமயம் உணவுக்காக பூமத்தியரேகைப் பகுதியையும் இவை கடந்து செல்லும். பறவைகளுக்கே உண்டான இறகுகளைப் பெற்றிருந்தாலும், இவை பறக்காது. அந்த இறகுகளை துடுப்பைப்போல் பயன்படுத்தி நீந்தக் கூடியவை. மணிக்கு 20 கி.மீ. வேகத்தில் நீந்தும் ஆற்றல் இவற்றுக்கு உண்டு. பொதுவாக, கறுப்பும் வெண்மையும் கலந்த நிறத்தில் காணப்படும். பெங்குவின் கூட்டத்தை 'காலனி' (Colony) என்று குறிப்பிடுவர். இவற்றின் முக்கிய உணவு மீன்கள்தான். அதற்காக, நீண்ட தூரம் தண்ணீரில் நீந்தும்.

ஃபேரி பெங்குவின் (fairy penguin) எம்பரர் பெங்குவின் (emperor penguin) என்று, இவற்றில் பதினைந்துக்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்துடன் காணப்படுகின்றன.

எம்பரர் பெங்குவின்கள் சுமார் நான்கடி உயரம் வரை வளர்கின்றன. பெங்குவின் வகைகளில் மிகப் பெரியது இதுதான். முப்பத்தைந்து கிலோ வரை எடை இருக்கும்.

பெங்குவின்களில் மிகச் சிறியவை, சிறிய நீலப் பெங்குவின்கள்தான். இவை முப்பத்தைந்து முதல் நாற்பது செ.மீ. உயரம்தான் இருக்கும். எடை ஒரு கிலோதான்.

தாய் பெங்குவின்கள் மீன்களை



அண்டார்க்டிக் அழகன்!


மட்டுமின்றி, நத்தை மற்றும் அவற்றின் ஓடுகளையும் உண்ணும். ஏனெனில், இவை கடினமான ஓடுகளை உடைய முட்டைகளை இடுகின்றன. மற்ற முட்டைகளின் ஓடுகளைவிட, பெங்குவின் முட்டையின் ஓடு 56 சதவிகிதம் கடினமானது!

பெண் பெங்குவின்களுக்கு அதிக கால்ஷியம் தேவைப்படுகிறது. அதற்காகவே நத்தை ஓடுகளைச் சாப்பிடுகின்றன.

அதன் முட்டை ஏன் இவ்வளவு கடினமாக உள்ளது? இவை உறைபனிக் கட்டிகள்மீது தங்கள் முட்டையை இடுகின்றன. அந்த ஓடுகள் உறுதியாக இல்லையென்றால், முட்டைகள் உடைந்துவிடும் அபாயம் உண்டு. அதனால், அந்த ஓடுகள் கடினத் தன்மை கொண்டுள்ளன. அந்த முட்டையிலிருந்து வெளிப்படும் குஞ்சு அடர்த்தியான சாம்பல் நிறத்தில் காணப்படும்.

விலங்கியலில் ஸ்ஃபெனிசிடே (Speniscidae) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவை பெங்குவின்கள். ஒரு நாளின் பெரும்பகுதியை, நீருக்குள் இரை தேடவே இவை பயன்படுத்துகின்றன. கடல் சிங்கம், சுறாமீன்கள், கில்லர் திமிங்கலம் போன்றவை இவற்றின் முக்கிய எதிரிகள்.

– ஏ.சரஸ்வதி, பெரிய காஞ்சிபுரம்





கனவில் வந்த காட்சி!

கெகுலே மும்முரமாக எழுதிக் கொண்டிருந்தார்.

அது ஒரு புதிய புத்தகம். பல வித்தியாசமான கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய அந்த நூலை, விரைவில் எழுதி முடித்து வெளியிடவேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால், மனம் ஓடிய வேகத்துக்குக் கை ஓட மறுத்தது.

அதுவரை எழுதியதை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தார். அவருக்கே திருப்தியில்லை.

சட்டென்று தன்னுடைய எழுத்து மேஜையிலிருந்து எழுந்துகொண்டார் கெகுலே.

சுவரோரமாக இருந்த கணப்பின் அருகே நாற்காலியை இழுத்துப் போட்டார். சௌகர்யமாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

கெகுலே ஒரு வேதியியல் நிபுணர். அவருடைய முழுப் பெயர் ஃப்ரெடரிச் அகஸ்ட் கெகுலெ வான் ஸ்ட்ராடோனிட்ஜ் (Friedrich August Kekule von Strandonitz).

என்.சொக்கன்

உச்சரிக்க ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதா? கவலைப்படவேண்டாம். தன்னுடைய பெயரை 'அகஸ்ட் கெகுலே' என்று அவரே சுருக்கிக்கொண்டுவிட்டார்.

இன்றைக்கு வேதியியல் படிக்கும் எல்லோரும், பல்வேறு சேர்மங்களின் சூத்திரங்களைக் கட்டமைப்புகளாக 'நீள நீளமாக ஒற்றைப் பிணைப்பு, இரட்டைப் பிணைப்பு என்று விதவிதக் கோடுகள் போட்டு எழுது (வரை)கிறோம் இல்லையா? அந்த வடிவமைப்பைக் கண்டுபிடித்த நிபுணர்களில் முக்கியமானவர் கெகுலே.

அவரை ஒரு குறிப்பட்ட வடிவமைப்பு குழப்பியடித்துக்கொண்டிருந்தது. அதன் பெயர் 'பென்ஸீன்' (Benzene). நீங்கள் பென்ஸீன் கேள்விப்பட்டிருப்பீர்கள். வேதியியல் பாடத்தில் அறுகோண (ஹெக்ஸகன்) வடிவத்தில், ஆறு கார்பன் அணுக்களை வைத்து, சுற்றிலும் ஹைட்ரஜன் அணுக்களைக் காவல் நிறுத்தி ஜோராகப் படம் வரைந்திருப்பீர்கள்.

இன்றைக்கு நாம் வரைகிற பென்ஸீன் வடிவம், அன்றைக்கு யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஆறு கார்பன், ஆறு ஹைட்ரஜன் சேர்ந்து எல்லாப் பிணைப்புகளோடும் எப்படி வடிவமைக்கப் பட்டிருக்கிறது என்று குழம்பினார்கள்.


கெகுலேவும் பலவிதமான வடிவங்களைக் கொடுத்துப் பார்த்தார். ஒவ்வொன்றிலும் ஏதோ ஒரு பிரச்னை. சலித்துப்போய் உட்கார்ந்துவிட்டார்.

ராத்திரி நேரம், நல்ல களைப்பு; கூடவே நெருப்பின் இதமான கதகதப்பு! உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிப்போனார் கெகுலே. அந்தத் தூக்கத்தில் ஒரு கனவு!

சாதாரணமாக, கெகுலேவின் கனவுகள்

அறிவியல் கதைகள்

அனைத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். அவற்றில் தேவதைகள், ராஜகுமாரிகளெல்லாம் வரமாட்டார்கள். விதவிதமான தனிமங்கள்தான் அணுக்களாகச் சுற்றிச் சுற்றி வரும். ஒரு பெரிய அணு, இன்னொரு சிறிய அணுவை விழுங்கும்; பிறகு இவை இரண்டும் சேர்ந்துகொண்டு வேறொரு மீடியம் சைஸ் அணுவைத் தேடிச் சென்று



ஒட்டிக்கொள்ளும்; கடைசியில் இவை எல்லாம் சேர்ந்து பின்னிப் பிணையும்; பலவிதமான சங்கிலிகளை உருவாக்கும்.

அன்றைக்கு, அவருடைய கனவில் வந்தவை கார்பன், ஹைட்ரஜன் அணுக்கள். அவற்றின் இடையிலான பிணைப்பு, ஒரு சங்கிலியாக இல்லாமல், உயிருள்ள பாம்பைப்போல் நெளிவதைக் கெகுலே பார்த்தார். ஆச்சர்யமான விஷயம், அந்தப் பாம்புகளில் ஒன்று, தன்னுடைய வாலைத் தானே கவ்விக்கொண்டிருந்தது.

சட்டென்று தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்ந்தார் கெகுலே. அவருக்கு ஒரு பிரமாதமான யோசனை தோன்றியிருந்தது.

என்ன யோசனை? பாம்புக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

ஒரு பாம்பு தன் வாலைத் தானே கவ்வுகிறது என்றால், அது ஒரு வட்ட

வடிவத்தை உருவாக்குகிறது. இல்லையா?

அதுவரை பென்ஸீனின் வடிவம் புரியாமல் குழம்பிக்கொண்டிருந்த கெகுலேவுக்கு, இது சிந்தனைப் பொறியைத் தூண்டிவிட்டது. கார்பன், ஹைட்ரஜன் அணுக்களைச் சங்கிலிபோல நீண்ட வரிசையில் வைத்து முயற்சி செய்யாமல், ஒரு வளைய வடிவத்தில் வைத்தால் என்ன என்று யோசிக்க ஆரம்பித்தார்.

அந்த விநாடியில் கெகுலேவின் களைப்பு, தூக்கம் எல்லாம் காணாமல் போனது. அர்த்த ராத்திரியில் கார்பனோடும் ஹைட்ரஜனோடும் தீவிரமாக மல்லுக்கட்ட ஆரம்பித்தார்.


அன்று முழுவதும் அவர் தூங்கவில்லை. பலவிதமான கணக்குகள், கோட்பாடுகள்... பென்ஸீனின் வடிவம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவருக்குப் புரியத் தொடங்கிவிட்டது. அதை எப்படிப் பரிசோதனை செய்து பார்த்து உறுதிப் படுத்திக் கொள்வது என்கிற யோசனையில் ஆழ்ந்தார்.

1865-ம் வருடம் கெகுலே தமது கண்டு பிடிப்பை ஓர் ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டார்.

அடுத்த வருடமே அதை மேலும் விரிவுபடுத்தி எழுதினார். அதன்மூலம் பென்ஸீனோடு அவரும் உலகப் புகழ் பெற்றுவிட்டார்!

நிஜமாகவே, கெகுலே தன்னுடைய கனவில் இருந்துதான் பென்ஸீன் வடிவத்தைக் கண்டுபிடித்தாரா? அதிர்ஷ்டத்தினால் கிடைத்த பரிசா இது?

சிலர் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் சம்பவத்தை கெகுலே நேரடியாக விவரித்திருந்தாலும் இவர்கள் நம்ப மறுக்கிறார்கள். 'அவர் விளையாட்டுக்குச் சொல்கிறார்' என்று மறுக்கிறார்கள்.




கெகுலே, தம் கனவில் இருந்துதான் பென்ஸீன் வடிவத்தைக் கண்டுபிடித்தாரா?

'தன் வாலைத் தானே விழுங்கும் பாம்பு என்பது, பல கலாசாரங்களில் உள்ள பிரபலமான குறியீடு. கெகுலே எங்கேயாவது அதைப் பார்த்திருக்கலாம். அந்தக் காட்சி அவர் மனத்தில் அழுத்தமாகப் பதிந்து போயிருக்கலாம். பின்னர் பென்ஸீன் வடிவம் பற்றிய ஆராய்ச்சிகளில் அவரையும் அறியாமல் அந்த வடிவம் வந்து விழுந்திருக்கலாம்' என்கிறார்கள்.

இங்கே நாம் புரிந்து கொள்ளவேண்டிய விஷயம், அறிவியல் என்பது வெறும் புத்தக ஞானம் மட்டுமில்லை; அது, மனித வாழ்க்கையோடு கலந்திருக்க வேண்டிய ஒன்று. வாழ்வியலிலிருந்து அறிவியலுக்குச் சில அம்சங்கள் செல்வதும், அறிவியலின் மூலம் நமது வாழ்க்கை பலன் பெறுவதும் தொடர்ச்சியாக நிகழ வேண்டிய விஷயங்கள். அப்போதுதான், அறிவியலும் சுவாரஸ்யமாகும்; மனித வாழ்விலும் சுவை குறையாது!

கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...



வேட்டையாடும் மீன்!



* ஆர்ச்சர் மீன்

மீனைத்தான் வலைபோட்டு வேட்டையாடுவார்கள். ஆனால், ஆர்ச்சர் மீன் (Archer fish) எனப்படும் மீன், வேட்டையாடிச் சாப்பிடுகிறது. நீர் மட்டத்துக்கு மேல் புல் பூண்டுகளின்மீது அமர்ந்திருக்கும் சிறு சிறு பூச்சிகள் இதன் இலக்கு. பார்வைக்குத் தென்பட்டால், குறிபார்த்து அதன்மேல் வாயால் நீரை வேகமாகப் பீய்ச்சியடிக்கும். தண்ணீர் பட்டதும் பூச்சி நீரில் விழும். உடனே நீரில் விழுந்து கிடக்கும் பூச்சியை லபக்கென்று சாப்பிட்டுவிடும்.

- ஏ.ரமேஷ், உ. எண் 1355,
காளப்பட்டி

* கொமாடோ டிராகன்



பூச்சிக்கு எதிரி!

தேரைகள், தவளை இனத்தை சேர்ந்தவை. பார்க்க அருவருப்பாகத் தோற்றமளித்தாலும், பூச்சிகளை அழிப்பதில் இவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. எதிரிகளிடமிருந்து தப்புவதற்கு உதவ இவை பழுப்பு நிறமாகக் காணப்படுகின்றன. தோலின் மேற்புறத்தில்

* மாண்ட்ரில்



பருக்களைப் போன்ற சுரப்பிகள் இவற்றுக்கு உண்டு. நீரைத் தேக்கிக் கொள்வதற்கு ஏற்றவாறு, இவற்றின் தோல் தடித்துக் காணப்படும். மூன்று மாத காலத்தில் ஒரு தேரை, 10,000க்கும் மேற்பட்ட பூச்சிகளை உணவாகக் கொள்கிறது.



★ தேரை

மிகப் பெரிய குரங்கு!

மேற்கு ஆப்பிரிக்காவில் வாழும் மாண்ட்ரில் (Mandrill) எனும் இனத்துக் குரங்குகள்தாம், குரங்கினத்திலேயே மிகவும் பெரியவை. வளர்ந்த மாண்ட்ரில் குரங் கின் எடை சுமார் 110 பவுண்டுகள்; உயரம் 36 அங்குலம். இவை கூட்டமாக வாழும் இயல்புடையவை.

கொமாடோ டிராகன்

பல்லி இனத்திலேயே மிகவும் பெரியது கொமாடோ டிராகன் (Komodo dragon). இது 3 மீட்டர் நீளமும், 100 கிலோவுக்கு மேல் எடையுள்ளதாகவும் இருக்கிறது. மணிக்கு 20 கி.மீ. வேகத்தில் ஓடும் ஆற்றல் கொண்டது. மஞ்சள் நிறமுடைய இதன் நாக்கு, பாம்பின் நாக்கு போல் பிளவுபட்டு இருக்கும்.

- சு.அபிஷேக், உ. எண் 518, சென்னை

★ எம்பரர் டாமரின்



எம்பரர் டாமரின்

பிரேசில், பெரு, பொலிவியா ஆகிய நாடுகளில் காணப்படும் அரிய குரங்கினம் எம்பரர் டாமரின் (Emperor tamarin). இதன் முகத்தில் அடர்த்தியான மீசை ரோமங்கள் உண்டு. ஜெர்மானிய மாமன்னர் மீசையைப் போலவே இந்தக் குரங்கின் மீசையும் காணப்பட்டதால், அவர் 'எம்பரர்' என்று இதையும் குறிப்பிட்டனர். பொதுவாக, இவை குடும்பமாகத்தான் வாழும். ஒரு குடும்பத்தில் மூன்று முதல் எட்டு குரங்குகள் வசிக்கும்.

- எஸ்.சுப்ரியா, உ. எண் 79, சென்னை

ஈ.ஜெனிதானியா,
ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீரமணா வித்யாலயா,
ராஜபாளையம்



பி.தர்ஷினி,
தேனி மேலப்பேட்டை
ஹிந்து நாடார்கள் மெட்ரிக்
பள்ளி, தேனி




ஆர்.ஸ்ரீநிதி,
எட்டாம் வகுப்பு, த.ஆ.வே.-பெல்
பள்ளி, இராணிப்பேட்டை

கே.விக்னேஷ்,
எட்டாம் வகுப்பு, சாரதா
மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி







எஸ்.ஞானசேகரன்,
உ. என் 1145,
திருக்கழுக்குன்றம்



ஜே.நந்தினி, ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்



கே.எஸ்.யோகேஷ்வரன்,
எட்டாம் வகுப்பு, தனலெஷ்மி சீனிவாசன்
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருச்சி



ஜே.பி.பாரதி,
எட்டாம் வகுப்பு, சாரதா
மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

உங்கள் கைவண்ணம்!



இனிக்கும் பந்து!

I. 1.சிவப்பு நிறக்காளை, நீருக்குள் பதுங்கும் - அது என்ன?

2. வளரும்போது கறுப்பு; வயதாகும் போது வெள்ளை - அது என்ன?

3. வால் உடைய பறவை, இரை எடுக்கும். ஆனால் தின்னாது - அது என்ன?

- ஆர்.பிருந்தா, மதுரை

II. 1. கடித்தால் உவர்ப்பு; தண்ணீர் குடித்தால் இனிப்பு - அது என்ன?

2. எழுந்து விழுந்து தாவிடும்; இரவும் பகலும் இரைந்திடும் - அது என்ன?

- எம்.மிருணாளினி,
உ. எண் 1567, மதுரை

III. 1. கிணற்றைச் சுற்றி வெள்ளைக்கல் - அது என்ன?

2. குடிக்காத பிள்ளை, அலறித் துடிக்குது - அவன் யார்?

- அ.அபிராமி, உ. எண் 54,
மருதம்

IV. 1. இனிக்கும் பந்து. ஆனால் விளையாட முடியாது - அது என்ன?

2. ஆனைக்கும் பிடிக்கும்; சேனைக்கும் பிடிக்கும். அடித்தால் வலிக்கும். கடித்தால் இனிக்கும் - அது என்ன?

3. பற்கள் பல உண்டு. விழுந்தாலும் முளைக்காது. கடிக்கவும் தெரியாது - அது என்ன?

4. கைபட்டு மலரும்; கால் பட்டு மறையும் - அது என்ன?

5. தஞ்சாவூர் பொம்மைக்குத் தலையிலே ஓட்டையாம் - அது என்ன?

விடுகதைகள்

6. நனைந்தாலும் நடுங்கமாட்டான் - அவன் யார்?

-ஆர்.பத்மப்ரியா, ஹூப்ளி

V. 1. தலை மட்டும் விரியும். பாம்பல்ல; பல நிறம் கொண்டது. உடையல்ல. - அது என்ன?

- ஏ.சுலைஹத் ஃபைஹா,
உ. எண் 998, கீழக்கரை

VI. 1. மஞ்சள் பெட்டி, மரக்கால் பெட்டி, ஒரு காலும் திறக்காத பெட்டி - அது என்ன?

2. கையிரண்டையும் ஆட வைக்கும், கந்தல் எல்லாம் கூட்டி வைக்கும் - அது என்ன?

3. பூப்போல மகராசி, காயத்துக்கும் துணையானாள் - அது என்ன?

4. நடக்க முடியாது; நகராமல் இருக்காது - அது என்ன?

- தைசீரா, கீழக்கரை

VII. 1. ஆயிரம் பேர் வந்து சென்றாலும், வந்த சுவடு தெரியாது - அது என்ன?

2. ஈரெழுத்தில் குறுவிதையாம்; இதற்குள்ளே நறுமணமாம். நாலெழுத்தில் நமக்குதவும் முக்கியப் பொருளுண்டாம் - அது என்ன?

- ஆர்.அம்பிகா, மதுரை

VIII. 1.முதுகெல்லாம் கூனல்; வயிறெல்லாம் பல் - அது என்ன?

2. [illegible]து, புரளாது; இழுத்துக் கட்டினா[illegible]த்தளவு பாலைக் கொடுத்து உதவி நிற்கும் - அது என்ன?

- எஸ்.வினித் மாதவன், மதுரை

IX. 1. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம் - அது என்ன?


2. அம்மிக் குழவி போல் பூப்பூக்கும்; அரிவாள் பிடிபோல் காய்காய்க்கும் - அது என்ன?

- சு.இரா.அகிலா, எட்டாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி



விடைகள்

I. 1.தீ, 2.முடி, 3.கரண்டி **II.** 1.நெல்லிக்காய், 2.கடல் **III.** 1.பல், 2.சங்கு **IV.** 1.லட்டு, 2.கரும்பு, 3. சீப்பு, 4.கோலம், 5.உண்டியல், 6.குடை **V.** 1.குடை **VI.** 1. வயிறு, 2.தையல் ஊசி, 3.பஞ்சு, 4.கடிகாரம் **VII.** 1. எறும்பு, 2.எள், எண்ணெய் **VIII.** 1. கருக்கரிவாள், 2.பனை மரம் **IX.** 1. வளையல், 2.வாழை மரம்!




குறிப்பு : சிவப்பு தவிர, மஞ்சள், ரோஸ், வெள்ளை, ஊதா நிறங்களில் செம்பருத்தி பூக்கும்.


காத்திருக்கு செம்பருத்தி காம்பு இலையுடன் நேர்த்தியான நிறங்கள் கொண்டு நிரப்ப வாருங்கள்!

வேண்டாத வேலை!

கதை : ஜி.எஸ்.ஸ்ரீமதி, உ.எண் : 1382, கோபி
படம் : பிள்ளை



* ஃபிபர்ஜ் முட்டை



* கொஃபின்



வாசனை நகரம்!

பிரான்ஸ் நாட்டிலுள்ள கிராஸ் (Grasse) நகரத்தில் ஏராளமான செண்ட் தொழிற்சாலைகள் உள்ளன. உலகெங்கும் பயன்படுத்தப்படும் முன்னணி செண்ட் வகைகள் இங்குதான் தயாராகின்றன. அதனால், 'வாசனை நகரம்' என்றே இதைக் குறிப்பிடுகிறார்கள். இந்த செண்ட் தொழிற்சாலைகளுக்காக, ஆண்டு தோறும் 10 மில்லியன் பவுண்ட் மல்லிகைப் பூக்களும், 3 மில்லியன் பவுண்ட் ரோஜாப்பூ இதழ்களும் 4 மில்லியன் பவுண்ட் ஆரஞ்சுப்பூ இதழ்களும் செண்ட் செய்யத் தேவைப்படுகின்றன. உதாரணமாக, 1 கிலோ ரோஜா எசன்ஸ் தயாரிக்க, ஐந்து டன் ரோஜா இதழ்கள் தேவைப்படுமாம். ரோஜாவுக்கு வலிக்காதா?

அதிசய முட்டைகள்

நவரத்தினங்களால் ஆன ஃபிபர்ஜ் முட்டைகள் (Feberge egg) வியப்பு தரும் அதிசயம். இந்த முட்டைகளைத் திறந்தால் அவற்றுள் தங்கத்தாலான வாகனம் ஒன்று இருக்கும். 1891ஆம் ஆண்டு வாழ்ந்த ஃபிபர்ஜ் என்ற பொற்கலைஞர், ரஷ்ய சக்கரவர்த்திகளுக்காக உருவாக்கியது



இந்த அதிசயக் கலைப்பொக்கிஷம். இன்றும் கிரெம்ளின் மாளிகையில் காண்பவரை இது வியப்புறச் செய்கிறது.

மாடிகளிலும் நெல்

ஜப்பானில் இப்போதெல்லாம் உயரமான வீட்டின் மாடிகளில் பூச்செடிகள், காய்கறிச் செடிகளைக் கொண்ட தோட்டங்கள் அமைப்பது ஃபாஷன் ஆகிவிட்டது. அதையும் மிஞ்சி, நெற்பயிரை நடும் விழாவைத் தனது திரையரங்கின் மாடியில் நடத்திக் காண்பித்துள்ளார், ரோப்பொங்கி ஹில்ஸ் (Roppongi Hills) பகுதியைச் சேர்ந்த ஜப்பானியர் ஒருவர். 45 மீட்டர் உயரமுள்ள

அட, அப்படியா?

அந்தத் திரையரங்கின் மாடியில் 110 ஜப்பானியர்கள் தங்கள் பாரம்பரிய ஆடைகளுடன் குழந்தைகள் சகிதம் நெற்பயிரை நட்டு மகிழ்ந்தனர். நம்ம வீட்டு மாடிகளிலும் இப்படிச் செய்தால் அரிசிப் பஞ்சமே வராது இல்லே?

நிறம் மாறும் மலர்

பொதுவாக, மொட்டு எந்த நிறத்தில் இருக்குமோ, அதையொட்டியே மலரின் நிறமும் அமையும். ஆனால், ரங்கூனில் காணப்படும் கொஃபின் (coffin) என்ற மலரின் காம்பு மஞ்சள் நிறத்தில் நீண்டிருக்கும். மொட்டு பச்சை நிறத்தில் இருக்கும். ஆனால், மலர்ந்தவுடன், அது வெளிர் சிவப்பு நிறத்தில் காணப்படும். மலரின் உட்பகுதியோ வெண்ணிறமாக இருக்கும். ●



● சென்ட் பாட்டில்கள்



● மாடித் தோட்டம்

ஏ. ஹம்சத் தவ்ஹா.
உ.எண் : 277, கீழக்கரை

நீண்ட காதுகள்; குள்ளமான கால்கள்; மிரட்சியான பார்வை; வியப் பூட்டும் துள்ளல் என்று ஆச் சர்யப்படுத்துபவை முயல்கள்! இவை 'லாகோமோர்பா' (Lagmorpha) எனும் வகையைச் சேர்ந்தவை. இவற்றின் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும். அதைக் கட்டுப்படுத்த இவை எப்போதும் மென்று கொண்டே இருக்கும்.

உலகின் பல பகுதிகளிலும் காணப்படும் முயல், பாலூட்டி இனத்தைச் சேர்ந்தது. மிக வேகமாக இனப் பெருக்கம் செய்யும். இவற்றின் ஆயுள் நான்கு முதல் பத்து ஆண்டுகள்தாம். முயல்களுக்கு 28 பற்கள் வரை காணப் படுகின்றன. வசீகரத் தோற்றத்தாலும், துள்ளியோடுவதாலும் காட்டின் குதூகல மாகவே விளங்குகின்றன!



• Bunny rabbit



• Jack rabbit rabbit



* Spring rabbit

முயல்களில் பல வகைகள் உண்டு. ஆப்பிரிக்காவில் வசிக்கும் ஸ்பிரிங் வகை முயல்கள் வலிமையான கால்களைக் கொண்டவை. இவை ஒரே நேரத்தில் 30 அடி தூரம் வரை தாவும் ஆற்றல் கொண்டவை. இவ்வகை முயல், ஒரு சமயத்தில் ஒரு குட்டிதான் ஈனும். இவை

குழிகளைத் தோண்டும்போது, மண் துகள்கள் காதினுள் புகாதவாறு, காதுகளை மூடிக்கொள்ளும் திறனைப் பெற்றுள்ளன.

காட்டன் வால் (Cotton tail) வகை முயல்கள், ஒரு சமயத்தில் நான்கு குட்டிகளை ஈனும். இவை குட்டிகளை வளைகளுக்குள் தனியே விட்டுச் செல்லும் சமயத்தில், வளையை புற்களால் மூடிவிட்டுச் செல்லும்.

வட அமெரிக்கப் பகுதியில் இருக்கும் ஜாக் (jack) வகை முயல்கள், மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் திறனுடையவை. மேலும், இவை இரண்டு கி.மீ. தொலைவில் எழும் சத்தத்தையும் கேட்கும் திறன் கொண்டவை.

பயோடேட்டா

ஆர்க்டிக் பிரதேசங்களில் வாழும் முயல்கள், அங்கு கிடைக்கும் செடிகளைத் தின்று உயிர் வாழ்கின்றன. இப்பிரதேச முயல்களுக்கு உடல் முடிகள் மழைக் காலங்களில் வெள்ளையாகவும், கோடைக் காலத்தில் பிரௌன் நிறமாகவும் மாறி விடுகின்றன.

காட்டின் குதூகலம்!



* Cotton tail rabbit

உலகின் மிகப்பெரிய முயல்களில் ஒன்று, பென்னி. இது இங்கிலாந்து நாட்டில் உள்ள ஆக்ஸ்ஃபோர்டுஷைர் என்னும் நகரில் வசிக்கும் மார்ட்டின் என்பவரின் வீட்டில் வளர்கிறது. 2.8 அடி நீளம் உள்ள இந்த முயலுக்கு, உணவுக்காக மட்டும் தினமும் ரூ.600 செலவாகிறது என்கிறார்கள். காய்கறி, பிஸ்கட் என்று கலந்து கட்டி விளையாடுகிறது பென்னி! தன் மனைவிக்குப் பிறந்த நாள் பரிசாக இந்த முயலை அளித்திருக்கிறார் மார்ட்டின்.

முயலின் எரு, மண்புழு உரம் தயாரிப்பதற்கு மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. தவிர, கிராமப்புறங்களில் வருவாய் ஈட்டுவதற்கு, முயல் வளர்ப்பு சிறந்த தொழிலாகவும் அமைந்திருக்கிறது.

– எஸ்.தணிகைவேல்,
உ. எண் 762, காஞ்சிபுரம்

மூளைக்கு வேலை

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன.
அவற்றைக் கண்டுபிடியுங்கள்.





விடைகள் : 1.மரம், 2.ஸ்ட்ரா, 3.ஐஸ்க்ரீம், 4.நாயின் நாக்கு, 5. சிறுவனின் சட்டை



ஸ்விஸ் மேஸ்ட்ரோ!

✸ உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் இவர்.

✸ 1981ஆம் ஆண்டு, ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் உள்ள பேசல் (Basel) என்னும் ஊரில் இவர் பிறந்தார்.

✸ 'ஸ்விஸ் மேஸ்ட்ரோ' என்பது இவருடைய செல்லப் பெயர்.

✸ இதுவரை பதினாறு 'கிராண்ட் ஸ்லாம்' கோப்பைகளை இவர் வென்றுள்ளார்.

✸ ஒற்றையர் பிரிவில் இவர் வென்ற பட்டங்கள் மொத்தம் 59.

✸ இரட்டையர் பிரிவில் பெற்ற பட்டங்களின் எண்ணிக்கை 18

✸ ஆஸ்திரேலிய ஓபன், அமெரிக்க ஓப்பன் ஃப்ரெஞ்சு ஓபன் ஆகிய மூன்றிலும் கோப்பை வென்றவர். தவிர, ஆறு முறை விம்பிள்டன் சாம்பியன்.

✸ கடந்த 2008ஆம் ஆண்டு, பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியின்போது, டென்னிஸ் இரட்டையர் பிரிவில் முதன் முறையாக தங்கம் வென்றார்.

✸ விளையாட்டின் மூலம் இவர் பெற்றுள்ள பரிசுத் தொகை ரூபாய் 230 கோடி.

✸ தற்போதைய டென்னிஸ் வீரர்களின் தர வரிசையில் முதலிடத்தில் உள்ளவர் இவர்தான்.


இவர் யார் தெரிகிறதா?

- கே.ரூபேஷ் யாதவ், பத்தாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, கோவை

[illegible]


கோகுலம்
ஜூன் 2010
முரளி
விஜய்
பத்ரிநாத்
ARA
260


அஸ்வின்



நியூ ஸ்டார்ஸ்!



✱ ரோஜா



✱ செம்பருத்தி



✱ அரளி

✱ தமிழகத்தில் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களில் ஒன்று மாமல்லபுரம். இங்குள்ள கடற்கரைக் கோவில்கள், உலகப் புகழ்பெற்றவை. பல்லவர் காலத்தின் கலைச் சிறப்பை இவை உணர்த்துகின்றன. 'ஏழு கோபுரப்பட்டினம்' என்ற பெயரும் இந்த ஊருக்கு உண்டு.

✱ உலகில் கரும்பு பயிரிடப்படும் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில் உள்ளது.



✱ புகையிலை உற்பத்தியில், அமெரிக்காவை அடுத்து இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது.

✱ ஒரு ஹெக்டேரில் விளையும் கோதுமையின் அளவு மற்ற நாடுகளைவிட நமது நாட்டில்தான் அதிகம்.



✱ பொருநை என்றும் பெயர்கொண்ட நதி தாமிரபரணி. இது பொதிகை மலையில் இருந்து உற்பத்தியாகிறது. 'பாண தீர்த்தம்' என்னும் அருவி இங்குதான் உள்ளது.



✱ ஹூப்பர் ஸ்வான்

✱ 'வண்டல் மண்' படிந்த பகுதிகளையே 'டெல்டா' என்று குறிப்பிடுகின்றனர். இந்த நிலத்தில்தான், நெல், கரும்பு உள்ளிட்ட நன்செய்ப் பயிர்கள் நன்கு தழைக்கும்.

✱ இந்தியாவிலேயே மிளகாய் உற்பத்தியில், முன்னணியில் உள்ள மாநிலம் ஆந்திரப் பிரதேசம். மாம்பழத்தில் ஒரு வகையான 'பங்கனபள்ளி'யும், ஆந்திர வகைதான்.

- எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை

கதம்பம்

✱ நமது நாட்டில் வியாபாரம் செய்ய வந்த முதல் ஐரோப்பிய நாட்டினர் போர்ச்சுக்கீசியர்.

✱ பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் மிகப் பழைமையானது ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகம்தான். இது 1249ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் 1284-ல் தொடங்கப்பட்டது.



✱ மாமல்லபுரம்





✱ பாண தீர்த்தம்

மிளகாயில் முதலிடம்!

✱ உடல் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது புரோட்டின் என்னும் புரதச் சத்து. இது பருப்பு வகைகளில் அதிகமாக இருக்கிறது. கீரை வகைகளில், முருங்கைக் கீரையில் புரதச் சத்து அதிகம்.

✱ விமானம் வானத்தில் எவ்வளவு அடி உயரத்தில் பறக்கிறது என்பதைக் கண்டறிய உதவும் கருவி ஆல்டி மீட்டர். இதைக் கண்டுபிடித்தவர் பால் கால்ஸ்மேன் (Paul Kollsman)

- பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை

✱ மலர்களில் 'ஜபா குஸுமம்' என்று சொல்லப்படுவது செம்பருத்திப் பூ; 'தாருணி புஷ்பம்' எனப்படுவது 'ரோஜா', 'கஸ்தூரி' என்றால், 'அரளிப்பூ'.

- எம்.மிருணாளினி, உ. எண் 1567, மதுரை

✱ இரப்பரை பதப்படுத்த உதவும் அமிலம் ஃபோர்மிக் அமிலம்.

✱ ஐஸ்லாந்து பகுதியில் வாழும் ஹூப்பர் ஸ்வான் (whooper swan) என்றழைக்கப்படும் வாத்து, அதிக உயரம் பறக்கக் கூடியது. கிட்டத்தட்ட 37 ஆயிரம் அடி உயரம் வரை பறக்கும்.


- எஸ்.சரஸ்வதி, பெரிய காஞ்சிபுரம்

தரிசனம்!

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகப் பெரிய ஞானி. ஒரு முறை அவரைப் பார்க்க பண்டிதர் ஒருவர் வந்திருந்தார். 'கடவுளைக் காண முடியுமா? கடவுளின் ஆற்றலை எப்படி உணர்வது?' என்று இராம கிருஷ்ணரிடம் அவர் நீண்ட விவாதத் தைச் செய்தார். பல்வேறு சான்றுகளோடு நெடுநேரம் பேசினார். இராமகிருஷ்ணர் முகமலர்ச்சியோடு அவரையே கவனித்துக் கொண்டிருந்தார். சுற்றி இருந்த சீடர்களுக்கு இந்த விவாதத்தில் குருஜி தோற்று விடுவாரோ என்று கவலை ஏற்பட்டது. பண்டிதர் பேசிமுடித்துவிட்டு இராமகிருஷ் ணரின் பதிலுக்குக் காத்திருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மென்மையான குரலில் சொன்னார்: "பண்டிதரே! எவ்வளவு அழகாகப் பேசுகிறீர்கள்? உங்கள் பேச்சின் அழகில் நான் இறைவனை தரிசித்தேன். ஆண்டவனின்

பரிசு!



ஆசிரியர் பத்து கேள்விகளைக் கொடுத்து "இந்தக் கேள்விகளுக்கு யார் சரியாக பதில் எழுதி வரு கிறீர்களோ அவர்களுக்குப் பரிசு உண்டு" என்று கூறி விட்டுச் சென்றார். ஒரு சிறுவன் ஒன் பது கேள்விகளுக்குப் பதில் எழுதிவிட்டான். பத்தாவது கேள்வியின் பதில் அவனுக்குத் தெரிய வில்லை. அதை, தன் நண்பனிடம் கேட்டு

பயன்!

1831ல் இங்கிலாந்து பிரதம மந்திரி யாக இருந்தவர் சர். இராபர்ட் பீல் (Sir. Robert Peel) அவர் ராயல் விஞ்ஞானக் கழகத்துக்கு விஜயம் செய்தபோது, மைக்கேல் ஃபாரடே, தான் கண்டுபிடித்த மின்சாரம் தயாரிக்கும் கருவியை விளக்கிக் காட்டினார். 'இந்த மின்சார உற்பத்தி மிக முக்கியமானதென்றும் பிற்காலத்தில் மனித சமுதாயத்துக்கு இது பெரிதும் பயன்படும்' என்றும் கூறினார்.

அதற்கு பிரதமர் இராபர்ட் பீல், "ஐயா, உங்களுடைய கருவியில் ஓர் முள் ஊசலாடுவது மட்டும்தான் தெரிகிறது. அந்த முள் மனித சமுதாயத்துக்கு எவ் வகையில் பயன்படும் என்பது எனக்கு விளங்கவில்லை" என்றார் ஏளனமாக.

அதைக் கேட்ட ஃபாரடே, "பிரதமர் அவர்களே! எதிர்காலத்தில் பெருமளவு மின்சாரம் உற்பத்தியாகி பொதுமக்கள் அதைப் பரவலாகப் பயன்படுத்தத்

அற்புதமான ஆற்றலைக் கண்டுகளித்தேன்'' என்றார். தன்னுடைய திறமைமீது கர்வம் கொண்டிருந்த பண்டிதர், இந்தப் பதிலைக் கேட்டவுடன் வெட்கித் தலைகுனிந்தார்.

- ஞா.த.ரம்யா,
உ. எண் 459,
இராணிப்பேட்டை



எழுதினான்.

மறுநாள் வகுப்பறை. அந்தச் சிறுவனைத் தவிர வேறு எவருமே சரியான பதிலை எழுதவில்லை. ஆசிரியர் அவனை அழைத்து ''இந்தா உன்னுடைய பரிசு. நீதான் அனைத்து பதில்களையும் சரியாக எழுதியிருக்கிறாய்'' என்றார். சற்று யோசித்த பின் அவன் ''ஐயா பத்தாவது கேள்வியின் விடையை என் நண்பன்தான் கூறினான். என்னை மன்னிக்கவும், என்னால் இந்தப் பரிசை வாங்கிக் கொள்ள முடியாது'' என்றான். அதைக் கேட்டு வியந்த ஆசிரியர் சொன்னார். ''இருக்கட்டும். ஆனாலும் இந்தப் பரிசு உனக்கேதான். உன் நேர்மையைப் பாராட்டி, இந்தப் பரிசை அளிக்கிறேன்'' என்றார்.

அந்தச் சிறுவன்தான், புகழ்பெற்ற கோபாலகிருஷ்ண கோகலே!

- ரா.வைஷ்ணவி,
ஆறாம் வகுப்பு, உ. எண் 625,
அம்ரிதா வித்யாலயம்,
செகந்திராபாத்

தொடங்குவார்கள். அப்போது அதன்மீது வரி விதித்து, அரசுக்கு அளவிடமுடியாத வருவாய் கிடைக்கப் போகிறது. அப்பொழுது சொல்லுங்கள்'' என்றார். அதைக்கேட்ட இராபர்ட் பீல் கப்சிப் ஆனார்.


- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475,
கோபி



கண்ணாமூச்சி

புள்ளிகளை இணையுங்கள்

கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்



பூனை வணக்கம்!

கதை : ஆசிக் அகமது,
உ.எண் : 1157, கம்பம்

படம் : பிள்ளை



எத்தனை மிட்டாய்கள்?



I. 1) சிந்துவிடம் சில மிட்டாய்களும் பிந்துவிடம் சில மிட்டாய்களும் உள்ளன. சிந்துவிடம் உள்ளவற்றில் ஒன்றை பிந்துவுக்கு கொடுத்துவிட்டால், இருவரிடமும் சமமான அளவு மிட்டாய்கள் இருக்கும். ஆனால் பிந்துவிடமிருந்து ஒன்றை எடுத்து சிந்துவிடம் கொடுத்தால், சிந்துவிடம் உள்ள மிட்டாய்கள் பிந்துவிடம் இருப்பதைப் போல இருமடங்காகிவிடும். அப்படியானால், இருவரிடமும் உள்ள மிட்டாய்களின் எண்ணிக்கை எவ்வளவு?

2) என்னிடம் சம அளவில் 25 பைசா காசுகளும், 50 பைசா காசுகளும் ஒரு ரூபாய் காசுகளும் உள்ளன. என்னிடம் மொத்தமாக ரூ.35 உள்ளது. அப்படியானால் என்னிடம் ஒவ்வொரு வகைக் காசிலும் எவ்வளவு எண்ணிக்கை உள்ளது?

- அதிபன் அன்புமணி,
உ. எண் 120, ஈரோடு

II. கீழே தரப்பட்டுள்ள பெருக்கல் கணக்குகளைக் கவனிக்கவும். இவை சரியா? தவறா? பெருக்கிப் பாருங்கள்.

12 x 12 = 144; 21 x 21 = 441
112 x 112 = 12544; 211 x 211 = 44521
113 x 113 = 12769; 311 x 311 = 96721
122 x 122 = 14884; 221 x 221 = 48841
1122 x 1122 = 1258884; 2211 x 2211 = 4888521

- என்.சம்பத்குமார்,
நான்காம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணாமிஷன் வித்யாலயா
உயர்நிலைப் பள்ளி, கோவை

புதிர்கள்

III. இதோ, திருக்குறளில் இருந்து சில புதிர்கள். ஒவ்வொரு குறளிலும் ஒரு சொல் இடம்பெறவில்லை. அது நம் உடலின் உறுப்பு. கண்டுபிடிங்க பார்க்கலாம்.

1. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப் படாத ....

2. உடுக்கை இழந்தவன் .... போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு.

3. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் ....

4. மோப்பக் குழையும் அனிச்சம் .... திரிந்து நோக்கக் குழையும் விருந்து.

5. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் .... என்ப வாழும் உயிர்க்கு.

6. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும் வாரி வளங்குன்றிக் ....

7. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே .... சுட்ட வடு.

- உரியாஷ், கீழக்கரை

IV. கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துப் புதிரைக் கவனித்துப் பாருங்கள். இதில், அடைப்புக் குறிக்குள் இடம் பெற வேண்டிய எழுத்துக்கள் என்ன? இவற்றைக் கண்டுபிடித்தால், இரண்டு தனித்தனிச் சொற்களை நீங்கள் அறிய முடியும்.

உதாரணம் : மரக்(கால்) கோள். மரக்கால், கால்கோள் என்றாகும்.

1. ஊர் (   ) புரி
2. சமீ (   ) பரம்
3. தொடக் (   ) பம்
4. மரக் (   ) பகம்
5. பாத்தி (   ) பம்
6. உற் (   ) ரம்
7. பர (   ) னன்
8. நடு (   ) யாமை

அடைப்புக்குறிக்குள் இடம்பெற வேண்டிய எழுத்துக்கள் : கலம், நிலை, மண், வலம், கம், பம், ரம், பத்தி

- என்.நர்மதா, உ- எண் 635, புதுச்சேரி

விடைகள் :

I. 1) சிந்துவிடம் உள்ள மிட்டாய்கள் ஏழு. பிந்துவிடம் உள்ள மிட்டாய்கள் ஐந்து.


2) 20

II. அனைத்தும் சரி

III. 1.செவி, 2.கை, 3.தலை, 4.முகம், 5.கண், 6.கால், 7.நாவினால்

IV. 1.வலம், 2.பம், 3.கம், 4.கலம், 5.ரம், 6.பத்தி, 7.மன், 8.நிலை






ஓர் எழுத்து மாற்றம்!

காலை நேரம். பள்ளி செல்லும் அவசரத்தில் சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டதால், என் பெரிய அண்ணன் காரில் கொண்டு போய் ஸ்கூலில் விட்டார். மாலை வீட்டுக்குத் திரும்ப, அப்பா டூவிலரில் வந்து கூட்டிச் செல்வதாகச் சொன்னார். நேரமானது. ஆனால், அப்பா வரவில்லை. ஒரு ரூபாய் காயின் போட்டு அப்பாவின் செல்லுக்குப் பேசினேன். அவர், ''நான் அவசரமான வேலை விஷயமாய் உள்ளேன். நீ உன் தோழியுடன் வந்துவிடு'' என்றார். அவளிடம் நான் முன்னதாகச் சொல்லாததால் அவளும் போய் விட்டாள். சரி என நடக்கத் தொடங்கினேன். அப்போது என் வகுப்பாசிரியை ''இரு. நானும் வருகிறேன்'' என்று கூட வந்தார். காலையில் நான் காரில் வந்து இறங்கியதையும், இப்போது நடந்து போவதையும் ஒப்பிட்டுப் பார்த்த டீச்சர் என்னைக் கிண்டலடிக்கும் விதமாய் ''கார், கால் ஒரே எழுத்துத்தான் வித்தியாசம்! இதே மாதிரி மார்னிங்குக்கும் ஈவினிங்குக்கும் ஓர் எழுத்து மட்டும்தான் மாற்றணும். எப்படின்னு சொல் பார்க்கலாம்'' எனக் கேட்டார். ஒரு வினாடி யோசித்த நான் ஆமாம் ''மிஸ். காலை, மாலை, 'கா'வை எடுத்து 'மா' போட்டால் மாலை. 'மா'வை எடுத்து 'கா' போட்டால் காலை'' என ஸ்பாட் டயலாக் சொன்னேன். அதைக்கேட்ட ஆசிரியை புன்னகை மலர, ரோடு என்று பாராமல் 'க்ளவர் கேர்ள்' என்று தட்டிக் கொடுத்தார்.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி



பஸ்ஸிலோ ட்ரெய்னிலோ..!

எங்கள் வகுப்பில் குறும்புக்காரச் சுட்டி ஒருவன் இருக்கிறான். அவன் ஆசிரியர் பாடம் நடத்தும்போதும், கேள்வி கேட்கும்போதும், குறும்புத்தனமான பதில் சொல்லி அனைவரையும் சிரிக்க வைத்துவிடுவான். அவனால் வகுப்பே கலகலப்பாகும். இப்படித்தான் ஒருமுறை வேதியியல் ஆசிரியர், பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அந்த பாடத்தின் பெயர் Three states of matter. Three states என்றால், திட, திரவ, வாயு நிலைகள் (solids, liquids, gases) என்ற ஆசிரியர், 'ஒரு திரவம் ஒரு state-டிலிருந்து மற்றொரு state-க்கு எப்படிச் செல்லும்?' என்று கேட்டார். உடனே அருகிலிருந்த அந்தக் குறும்பன் சட்டென்று எழுந்து சொன்னான் : ''பஸ்ஸிலோ, டிரெயினிலோதான் சார்!'' என்றான். அதைக் கேட்டு நாங்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தது அடுத்த state-க்குக் கேட்டிருந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.




- அதிபன் அன்புமணி,
உ. எண் 120, ஈரோடு

தலை சுற்றுகிறது!

ஆங்கில வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியை 'குறைத்தல்', 'நடத்தல்' என்று ஒவ்வொரு நிகழ்வுக்கும் உண்டான ஆங்கில வார்த்தைகளைச் சொல்லி, வாக்கியம் எப்படி அமைக்க வேண்டும் என்று பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார். மாணவர்களை ஒவ்வொருவராகச் சொல்லி, ஒவ்வொரு வாக்கியத்தை அமைக்கச் சொன்னார். அதனால், நேரடியாகவே பயிற்சி பெறவும், அறிந்து கொள்ளவும் சுலபமாயிருந்தது. சற்று நேரப் பயிற்சிக்குப் பின் ஆசிரியை கேட்டார். ''சரி, இப்ப ஒரு கேள்வி. தலை சுத்துகிறது. இதை எப்படி இங்கிலீஷ்ல சொல்வீங்க?'' எவருக்கும் பதில் தெரியவில்லை. சட்டென்று ஒரு மாணவன் எழுந்து சொன்னான். ''head is rotating'. அதைக் கேட்ட மாத்திரத்தில், வகுப்பறையில் குபீரென்று எழுந்தது சிரிப்பொலி!

- ஆர்.ஸ்ரீவித்யா, உ. எண் 466,
கோவை

வழி காட்டுங்கள்!



தகிக்கும் வெயிலில் உருகும் முன்
ஐஸ்கிரீமை அடைய வழி காட்டுங்கள்.

அமுது



தமிழ்க் கடல்!

அலைக் கரங்களால் நீர் சிதறிச் சிரிக்கிறது கடல் இது. பிரிந்து கிடக்கும் நிலங்களை இணைத்து வைக்கிறது. கடல் பாசிகள் முதல் திமிங்கிலங்கள் வரை பல்வேறு உயிர்களுக்கான வாழிடம் இதுதான். மீன்பிடிப் படகுகள் முதல் நீர்மூழ்கிக் கப்பல் வரை உலவுவதும் இந்தக் கடலில்தான்! 'திரை' கடலோடியும் திரவியம் தேடு' என்பது கடல் குறித்த புகழ்பெற்ற பழமொழி! 'திரை' என்கிற சொல்லுக்கு 'அலை' என்று பொருள். அடுத்தடுத்துப் பரவும் அலைகளைக் கொண்டதால், கடலையும் 'திரை' என்று குறிப்பிட்டனர்.

இதைத் தவிர, ஆழி, வேலை, புணரி, முந்நீர், வாரிதி, தொன்னீர், ஓதம், சலதி, பரவை, கார்கோள், உவரி என்று வெவ்வேறு பெயர்களாலும் கடல் குறிப்பிடப்படுகிறது. இவை அனைத்துமே காரணப் பெயர்கள்தாம்.

ஆற்று நீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றும் கூடுவதால், 'முந்நீர்'; ஒரு காலத்தில் கடப்பதற்கு அரிய நீர் எல்லையானதால் 'கடல்;' பரந்து விரிந்த நீர்ப் பரப்பு என்பதால் 'பரவை'; மிகுந்த ஆழமுடையது என்பதால் 'ஆழி'; மேகங்கள் தோன்றவும், மழை பொழியவும் காரணமாவதால் 'கார்கோள்'; உப்பு நிறைந்திருப்பதால் 'உவரி'... ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்தது. இப்படிப் பார்க்கும்போது, கடலைவிடத் தமிழின் ஆழமும், அழகும் பிரமிக்க வைக்கிறதல்லவா?

- ஆர்.பவித்ரன், ஆறாம் வகுப்பு,
டான் பாஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

பச்சைப் பசேலென்ற செடிகொடிகளைப் பார்த்த அந்த மான்குட்டி காட்டினுள் வெகுதூரம் வந்துவிட்டது. வெகுநேரத்துக் குப் பிறகுதான், தனியே வந்துவிட்டோம் என்று புரிந்தது. எப்படிப் போவது என்கிற வழி தெரியவில்லை. தவித்த அந்த மான்குட்டியைப் பார்த்தது ஒரு கழுகு!

'தனியாக வந்திருக்கிறதே? நரி, ஓநாய், சிறுத்தை... என்று இங்கே எவ்வளவு ஆபத்துகள் இதற்குக் காத்திருக்கின்றன. அதைத் தெரிந்து கொள்ளாமல் இப்படி வந்துவிட்டதே' என்று கவலைப்பட்டது அந்தக் கழுகு.

கழுகு தன்னை கவனித்ததை அறியாமல், அங்குமிங்கும் ஓடியது மான் குட்டி. பொழுது சாய்ந்த நிலையில் எங்கு தங்குவது என்றும் அதற்குக் கவலை ஏற்பட்டது. அந்த நிலையில், சரேலென்று கீழிறங்கிய கழுகு, ஒரு மரத்தண்டின்மேல் அமர்ந்தது.

''எங்கு தங்குவது என்றுதானே கவலை? பயப்படாமல் இந்த மரத்தடியில் தங்கு. நான் உனக்குத் துணையாக இருப்பேன். ஏனிப்படித் தனியாக வந்தாய்?'' எனக் கேட்டது கழுகு.

அதைக் கேட்டவுடன், சற்றே துணிவு கொண்டது மான்குட்டி. சற்றுத் தூரத்தில், ஒரு புதரின் மறைவிலிருந்த நரி இவர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தது.

'தனியாக இருந்தால் இவனைச் சாப்பிட்டுவிடலாம். கழுகுப் பயல் வேறு இருக்கிறானே! என்ன செய்யலாம்' என்று யோசித்துக் கொண்டிருந்தது நரி. கழுகு இரவு முழுக்க அந்த இடத்தை விட்டு அசையவேயில்லை. 'பொழுது விடியட்டும். இரை தேடப் போகும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று காத்திருந்தது நரி.

மறுநாள்..

''தம்பி, ஜாக்கிரதையாய்ப் போ, வெகு தூரம் சென்று வழி தெரியாமல் அலையாதே. எப்போதும் விழிப்புடன் இரு. புதியவரிடம் கவனமாய் இரு.''



என்று எச்சரித்த கழுகு, இரைதேடப் பறந்தது. மான் குட்டி பயந்தபடியே உணவு தேடக் கிளம்பியது.

வழியில் அதைப் பார்த்த நரி, "என்ன தம்பி, உணவு தேடிப் போகிறாயா? வா, உனக்கு நல்ல வயலைக் காட்டுகிறேன்'' என்றது. 'தம்பி' என்றதும் மகிழ்வடைந்த மான்குட்டி அந்த நரியைப் பின் தொடர்ந்தது. கழுகு செய்த எச்சரிக்கையை மறந்தே போனது.

கழுகின் குரல்!




ப.கோகுலகிருஷ்ணன்.
உ.எண் : 971, நம்பியூர்

சற்றுத் தொலைவில் இருந்த வயலைக் காட்டியது நரி. பசுமையாய் இருந்த வ்யலைக் கண்டதும் உற்சாகமாகப் பாய்ந்து ஓடியது மான் குட்டி. அங்கே பொறி வைத்திருப்பது அதற்குத் தெரியாது.

ஓடிய வேகத்தில் ஒரு கல் இடறியது. அதனால் கீழே விழுந்தது மான்குட்டி. அதை அறியாமல், பொறியில் மான் குட்டி மாட்டிக் கொண்டதாக நினைத்து, சாப்பிட ஓடி வந்தது நரி. நரி ஓடி வருவதைப் பார்த்த மான்குட்டி மிரண்டது. ஏதோ ஆபத்து என்று துள்ளிக் குதித்தது. தனக்குத் தெரியாமலேயே அங்கே வைத்திருந்த பொறியைத் தாண்டி ஓடியது. துரத்திய நரியோ பொறியில் சிக்கிக் கொண்டு அலறியது. அதைக்கேட்ட மான் மேலும் மிரண்டு ஓடியது.

'எப்போதும் விழிப்புடன் இரு; புதியவரிடம் கவனமாய் இரு' என்ற கழுகின் வார்த்தைகள் அதன் காதில் ஒலித்தன. அதை நினைத்தபடியே காட்டுக்குள் மீண்டும் சென்று தன் குடும்பத்துடன் இணைந்தது மான்குட்டி.

சுட்டீஸ் கைவண்ணம்!



பி.கோகுல்,
இரண்டாம் வகுப்பு, சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

எஸ்.அண்ட்ரியா,
முதல் வகுப்பு, கோல்டன் ஆங்கில பள்ளி, ஆத்தூர்






ஸ்ரீசுப்ராஜா,
நான்காம் வகுப்பு, உ. எண் 876, ஆரூர் வித்யா மந்திர், திருவாரூர்



ஆர்.செல்வகணபதி,
ஆறாம் வகுப்பு, காந்தி நகர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருவண்ணாமலை



எஃப்.வேலு,
ஐந்தாம் வகுப்பு, நப்பின்னை மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

கல்லெழுத்து!

கதை : ஆர்.அம்பிகா, மதுரை   படம் : பிள்ளை




நிர்வாக வசதி உள்ளிட்ட காரணங்களுக்காக உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்ட மாநிலம் உத்தராஞ்சல். ஜனவரி 2007ல், 'உத்தரகண்ட்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த மாநிலத்தின் வடக்கே திபெத்தும், கிழக்கே நேபாளமும், தெற்கே உத்தரப் பிரதேசமும், மேற்கே ஹரியானா, மற்றும் ஹிமாசலப் பிரதேசமும் அமைந்துள்ளன.

புராணங்களில் இப்பகுதி 'தேவ பூமி' என்று குறிப்பிடப்படுகிறது. அந்தக்காலத்தில் கேதார்கண்ட், மானஸ்கண்ட், ஹிமவந்த் எனக் குறிப்பிடப்பட்ட இப்பகுதியில் ரிஷிகளும், முனிவர்களும் வசித்ததாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன.

இறுதியில், இப்பகுதி பிரிட்டிஷார் வசமானது. சுதந்திரத்துக்குப் பிறகு 1950-ல் உத்தரப் பிரதேசம் என்று பெயர் சூட்டப்பட்டது. உத்தரப்பிரதேசம், சுதந்திர இந்தியாவின் மிகப் பெரிய மாநிலங்களுள் ஒன்றாக இருந்தது.

1970-களின் மத்தியில் உத்தரப் பிரதேசத்தின் கார்வால், குமோன் பகுதிகளைத் தனியாகப் பிரித்து, உத்தரகண்ட் என்ற தனி மாநிலமாக அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. நாளுக்கு நாள் வலுப்பெற்ற இந்தக் கோரிக்கையின் விளைவாக, இந்திய யூனியனின் 27ஆவது மாநிலமாக உத்தரகண்ட் உருவானது.


* கேதார்நாத்


* பத்ரிநாத்

இன்று கார்வால், குமோன் என அழைக்கப்படும் பகுதிகளை, கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் 'குண்டியாஸ்' வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களையடுத்து, குஷானர்கள், குப்தர்கள், பாலர்கள், சந்தர்கள், கூர்க்காக்கள் என்று பல்வேறு வம்சத்தினர் ஆட்சி செய்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின்

2001-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்த மாநிலத்தின் மக்கள் தொகை சுமார் 85 லட்சம். 85 சதவிகிதம் பேர் இந்துக்கள். முஸ்லிம்களின் எண்ணிக்கை 10 சதவிகிதம். சீக்கியர்கள் சுமார் 2.5 சதவிகிதம். மாநில மக்கள் தொகை, ஆயிரம் ஆண்களுக்கு 964 பெண்கள் என்ற விகிதத்தில் உள்ளது.

எழுத்தறிவு பெற்றோர் 72 சதவிகிதம். முக்கிய மொழிகள் இந்தி, கார்வாலி, குமோனி.

சுமார் 51 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பு கொண்ட இம்மாநிலத்தின் நிலப்பரப்பில், 93 சதவிகிதம் மலைப்பிரதேசம். 64 சதவிகிதம் காடுகள். இங்குள்ள இமய





ஜீவ நதிகளின் தாய்!

மலைப் பகுதியில் மிக உயர்ந்த சிகரங்கள் அமைந்துள்ளன. இந்தியாவின் மிக முக்கிய ஆறுகளான கங்கையும், யமுனையும் இந்த மாநிலத்திற்குட்பட்ட இமயமலைப் பகுதியில்தான் உற்பத்தியாகின்றன.

பதிமூன்று மாவட்டங்கள் கொண்ட உத்தரகண்ட் மாநிலத்தில், சுமார் 15 ஆயிரத்து 700 கிராமங்களும், சிறியதும், பெரியதுமாக 86 நகரங்களும் உள்ளன. சட்டமன்றத்தில் 70 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். இங்கிருந்து லோக்சபாவுக்கு ஐந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ராஜ்யசபா உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்று. மாநிலத்தின் தலைநகரம் டேராடூன். மாநில உயர்நீதிமன்றம் நைனிடாலில் அமைந்துள்ளது.

இந்தியாவிலேயே மிகவும் பழைமையான எஞ்சினியரிங் கல்லூரியான 'ரூர்க்கி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்' இம்மாநிலத்தில் உள்ளது. தற்போது அது ஐ.ஐ.டி., ரூர்க்கி என்று அழைக்கப்படுகிறது.

கோவிந்த வல்லப பந்த் விவசாயம் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், இந்தியன் மிலிடரி அகாடமி, வன ஆராய்ச்சிக் கழகம் போன்றவை இங்குதான் அமைந்துள்ளன. இவை தவிர, டேராடூன், நைனிடால் போன்ற கோடைவாசஸ்தலங்களில் புகழ் வாய்ந்த உறைவிட பள்ளிக்கூடங்கள் அமைந்துள்ளன.

முக்கியத் தொழில் விவசாயம்தான். சுமார் ஏழு லட்சத்து 85 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், விவசாயம் நடைபெறுகிறது. தவிர கனிம வளமும் மிகுந்து காணப்படுகிறது. சுண்ணாம்புக்கல், மாக்னஸைட், பாலமைட், செம்பு, கிராஃபைட் போன்ற கனிமங்கள் கணிசமான அளவில் இங்கே கிடைக்கின்றன.



கங்கை, யமுனை, பாகீரதி, காளி, அலகனந்தா, மந்தாகினி, சரயு நதிகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டுள்ளன. அங்கே நீர் மின் உற்பத்தியும் செய்யப்படுகிறது.

கங்கை உற்பத்தியாகும் கங்கோத்ரி, யமுனை உற்பத்தியாகும் யமுனோத்ரி, சிவபெருமானுக்குரிய கேதார்நாத், விஷ்ணுவுக்குரிய பத்ரிநாத் இவை நான்கையும் சேர்ந்து 'சார் தாம்' என்பர். அதாவது, 'நான்கு புனிதத் தலங்கள்'. தவிர ரிஷிகேஷ், ஹரித்வார், சீக்கியர்களின் புனிதத் தலமான ஹேம்குண்ட் உட்படப் பல பௌத்த மடாலயங்களும் இங்குள்ளன.

பாறைகள் மீது ஏறுதல், மலையேற்றம் ஆகியவை இங்கே மிகப் பிரபலமானவை. கட்டுப்பாடின்றி பெருக்கெடுத்தோடும் ஆற்றில் சாகசப் படகோட்டும் 'ரிவர் டிராஃப்டிங்' என்ற சாகச விளையாட்டும் பிரபலம்தான்.

இந்த மாநிலத்துக்கென்றே சில பிரத்யேகமான கிராமிய நடனங்களும், திருவிழாக்களும் உண்டு. தேவிதுர மேளா, பூர்ணகிரி மேளா, நந்தா தேவி மேளா, கௌசார் மேளா, மஹா மேளா, உத்தரைனி மேளா, விஷு மேளா, பைசாகி போன்றவை சில முக்கிய திருவிழாக்களாகும். நந்தா தேவி ராஜ் ஜாட் யாத்ரா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கிறது.

காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் உருவான 'சிப்கோ இயக்கம்' மிகவும் பிரபலமானது. இப்பகுதியில் உள்ள மரங்களை வெட்ட யாரும் வரும்போது, உள்ளூர் மக்கள் கை கோத்து, மரத்தைச் சுற்றி நின்று மரம் வெட்டப்படுவதைத் தடுக்கும் இயக்கம்தான் சிப்கோ. (சிப்கோ என்றால் ஒட்டிக்கொள்வது என்று பொருள்) இந்த இயக்கத்தில் மிக முக்கியமானவர் சுந்தர்லால் பகுகுணா. ' மண் எமது; நீர் எமது; இந்த வனமும் எமது; எங்கள் மூதாதையர் வளர்த்த காடுகளைப் பாதுகாப்பது எங்கள் கடமை. இது கார்வாலி மொழியில் சிப்கோ இயக்கத்தினர் பாடும் பாடலின் மொழி பெயர்ப்பு. உலகம் முழுமைக்கும் உரிய சர்வதேசப் பாடல் அல்லவா இது! ●

நட்புக்கு உதாரணம் டெடி!

நவீன பஞ்சதந்திரக் கதைகள்

ஆசிரியர் : இரா.நடராசன். வெளியீடு : விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை-600 002. விலை.ரூ.75

குழந்தைகளுக்கான நூல்களை எழுதுவதில் தனியிடம் பெற்றவர் இந்த நூலின் ஆசிரியரான இரா.நடராசன். நாம் அறிந்த, கேள்விப்பட்ட பழைய பாட்டி கதைகள்கூட, இவரிடமிருந்து புதிய மெருகுடன் வெளிப்படுகின்றன. உதாரணமாக, கரடியிடம் சிக்கிக்கொண்ட நண்பர்கள் கதை. ஒருவன் மரத்தில் ஏறித் தப்ப, மற்றவன் இறந்தவன் போலக் கீழே விழுந்து கிடந்து தப்பித்தான். நாமறிந்த கதைதான்.

விழுந்து கிடந்தவனின் காதில் கரடி ஏதோ சொல்லிவிட்டு ஓடியது. மரத்திலிருந்தவன் கேட்டான் : 'கரடி என்ன சொன்னது?'. 'ஆபத்தில் விட்டுவிட்டு ஓடுபவன், உண்மையான நண்பன் அல்ல என்றது கரடி!' அதோடு நிறுத்தவில்லை ஆசிரியர். அதனால்தான், தம் குழந்தைகளுக்கு டெடி கரடி பொம்மையை வாங்கிக் கொடுத்து, உண்மையான நட்பை நினைவூட்டுகிறார்கள் மனிதர்கள் என்று சொல்லும் உத்தி, சுவாரஸ்யம்.








நற்பண்பை வளர்க்கும் கதைகள்

ஆசிரியர்: பேராசிரியர் எ.சோதி வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 605 003.

சிறுவர்களிடம் நற்பண்புகளை வளர்க்கின்ற விதத்தில் அமைந்துள்ள கதைகளின் தொகுப்பு. கொடை, நட்பு, உதவி, மதிப்பு என்று பத்துக்கும் மேற்பட்ட பகுதிகளாக அமைந்துள்ளது இந்த நூல். சில கதைகள் தெரிந்தவை; பல புதியவை. ஆனால், ஒவ்வொன்றும் குழந்தைகளை முறைப்படுத்த வேண்டும் என்ற உள்ளுணர்வின் வெளிப்பாடு! உதாரணமாக, தாகம் என்று தண்ணீர் கேட்டவருக்காக ஐந்து கி.மீ. நடந்து சென்று குடிதண்ணீர் கொண்டு வந்து தருகிறாள் ஒரு பெண். அவள் செயலால் மகிழ்ந்த துறவி, அந்தக் கிராமத்தின் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க, நீரூற்று ஏற்படுத்தினார். 'நம் நற்செயல்கள் ஊருக்கே உதவ முடியும்' என்பது போன்று, நல்ல கருத்துகளால் நிறைந்திருக்கிறது புத்தகம்!

– ஆர்.எஸ்.ஆர்.



வானமும், கடலும் நீல நிறமாகத் தெரிவது ஏன்?


சூரிய ஒளி பட்டகத்தின் வழியே ஊடுருவும்போது, ஏழு நிறங்களாகப் பிரியும். இதை 'நிறப்பிரிகை' என்று சொல்வார்கள். சூரிய ஒளியில் அடங்கியுள்ள ஊதா (violet), கருநீலம் (Indigo), நீலம் (Blue) ஆகிய மூன்று நிறங்களும், வாயு மண்டலத்தின் மூலக்கூறுகளுடன் மோதும்போது அதிக அளவில் சிதறுகின்றன. பூமியைச் சுற்றிலும் காற்று மண்டலம் பரவியிருக்கிறது. அதில் மோதிச் சிதறும் நீல நிறம், வான்வெளியை நீல நிறமாகக் காட்டுகிறது. வானின் நீல நிறத்தை கடல் நீர் பிரதிபலிக்கிறது. அதனாலேயே கடலும் நீல நிறமாகத் தென்படுகிறது.

உதாரணமாக, காற்று மண்டலம் இல்லாத நிலவில் இருந்து, வானத்தைப் பார்த்தால், இந்த நீலநிறம் தெரியாது. வானம் அங்கு கறுப்பு நிறமாகத் தென்படும். காரணம், வாயு மண்டலம் இல்லாததால், அங்கே ஒளிச் சிதறல் ஏற்படுவதில்லை.

- எம்.மிருணாளினி,
உ. எண் 1567,
மதுரை

எலுமிச்சம் பழத்தின் சாறு சிமெண்ட் தரையில் பட்டால், அந்த இடத்தில் வெண்ணிறமான கறை உண்டாவது ஏன்?

எலுமிச்சம்பழத்தில் சிட்ரிக் அமிலம் உள்ளது. நறுக்கும்போது, அந்த அமிலம் சிமெண்ட் தரையில் பட்டால், அங்கு வேதிவினை நடக்கிறது.



சிமெண்டில், கால்சியம் சிலிகேட், கால்சியம் அலுமினேட் போன்ற வேதிப் பொருட்கள் இருக்கின்றன. இவற்றோடு சிட்ரிக் அமிலம் வேதிவினை புரிகிறது. அதன் விளைவாக, 'கால்சியம் சிட்ரேட்' என்ற வேதிப்பொருள் உருவாகிறது. அப்படி உருவாகியதன் அடையாளம்தான், தரையில் வெண்ணிறமான கறையாக நமக்குத் தெரிகிறது.

- ஜி.ப்ரணவ்,
உ. எண் 424, திருச்சி

காரணம்

சுருக்கம் விழுவது ஏன்?

வயதாக வயதாக நமது உடலின் தோலில் சுருக்கம் விழுவது ஏன்?

நம் உடலின் தோல் பல அடுக்குகளைக் (multilayer) கொண்டது. 'எபிடெர்மிஸ்', 'எண்டோடெர்மிஸ்' என்ற தோலின் இரு பகுதிகளுக்கு மத்தியில், 'கொலாஜன்' என்ற பொருள் உள்ளது. இந்த கொலாஜன் இளமைப் பருவத்தில் ஏராளமாக உற்பத்தியாகிறது. இது தோலின் அடியில் உள்ள தசைநார்களையும் எலும்பையும் பிணைத்து, அதன்மூலம் தோலுக்கு ஒரு விறைப்பையும் முறுக்கையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.

வயது அதிகமாகும்போது, கொலாஜன் சுரப்பது குறைய ஆரம்பிக்கும். அதனால் தசைகள் தம் விரைப்பை இழந்து சுருங்கி



விடுகின்றன. தசைகள் விறைப்பை இழப்பதால், அதை மூடியுள்ள தோலும் தளர்கிறது. அதுவே உடலில் சுருக்கமாகத் தென்படுகிறது.

- எஸ்.தணிகைவேல்,
உ. எண் 762, காஞ்சிபுரம்

பயிற்சி



வரைந்து பாருங்கள்!

வழங்குபவர் : எஸ். வஜ்ரவேலு


கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1626. எஸ்.சோஃபியா, ஐந்தாம் வகுப்பு, விட்டில் லேம்ப்ஸ் பள்ளி, சென்னை
1627. எஸ்.வினோத்குமார், ஒன்பதாம் வகுப்பு, எவர்வின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1628. எஸ்.மௌலீஷா, இரண்டாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1629. க.ஹரிணி, இரண்டாம் வகுப்பு, மரிய நிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பொழிச்சலூர்
1630. க.முத்துநகை, ஐந்தாம் வகுப்பு, மரிய நிவாஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பொழிச்சலூர்
1631. ஜி.பாலாஜி, ஆறாம் வகுப்பு, எஸ்.எம்.எம். மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
1632. ச.இந்திரா பிரியதர்ஷினி, எட்டாம் வகுப்பு, நா.சு.வி.வா. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பட்டி வீரன்பட்டி
1633. கா.மிதுனா, எட்டாம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருவைகுண்டம்
1634. கே.ஆர். அபிராமி, குழந்தை ஏசு நர்சரி மற்றும் ஆரம்பப் பள்ளி, நுங்கம்பாக்கம்
1635. கே.மீனா, நான்காம் வகுப்பு, எல்.எம்.டி. மேல்நிலைப் பள்ளி, களைமேடு
1636. ஜி.எம். ஆஷியா ஜன், நான்காம் வகுப்பு, செட்டிநாடு வித்யாஸ்ரம், சென்னை
1637. ஆர்.எஸ்.ஐஸ்வர்யா, பத்தாம் வகுப்பு, செயின்ட் ஜோஸஃப் மெட்ரிக் பள்ளி, மன்னார்குடி
1638. க.விஷ்ணுப்ரியா, பன்னிரண்டாம் வகுப்பு, எஸ்.ஆர்.வி. மெட்ரிக் பள்ளி, லால்குடி
1639. ஜெ.எஸ்.டில்லிபாபு, பன்னிரண்டாம் வகுப்பு, சே.சா.மு. மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்
1640. கே.தீபக், மூன்றாம் வகுப்பு, எல்.எம்.டி. மே.நி. பள்ளி, களைமேடு



1641. கே.தினேஷ், இரண்டாம் வகுப்பு, எல்.எம்.டி. மேல்நிலைப் பள்ளி, சூளைமேடு
1642. சி.சுலக்ஷன், ஆறாம் வகுப்பு, ஒய்.ஆர்.எம்.பள்ளி, பாப்பாரப்பட்டி
1643. எம்.சங்கீதா, எட்டாம் வகுப்பு, கே.ஜி.பி. பள்ளி, தர்மபுரி
1644. எஸ்.ராஜராஜேஸ்வரி, எட்டாம் வகுப்பு, விவேகம் மே.நி. பள்ளி, தாராபுரம்
1645. கோ.ராஜேஷ் திலகன், ஏழாம் வகுப்பு, ரோஸ் மேரி மெட்ரிக் பள்ளி, பாளையங்கோட்டை
1646. ஜே.கே.பரிபூர்ணா, லிட்டில் ஃப்ளவர் நர்ஸரி மற்றும் பிரைமரி பள்ளி, அரசம்பட்டி
1647. எஸ்.அம்பை, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீகிருஷ்ணா பாலமந்திர், ராணிப்பேட்டை
1648. கே.எஸ்.ராஜேஸ்வரி, எட்டாம் வகுப்பு, பி.எம்.சி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி
1649. ஈ.ஹேமா சபரி, இரண்டாம் வகுப்பு, ஞான் மந்திர் பப்ளிக் பள்ளி, புதுதில்லி
1650. ர.சுதர்ஸா, ஐந்தாம் வகுப்பு, டி.வி.எஸ். பள்ளி, மதுரை
1651. அ.அருண்பாலாஜி, எட்டாம் வகுப்பு, சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
1652. கோ.கிருபாஸ்ரீ, ஆறாம் வகுப்பு, மாடர்ன் சீனியர் செகண்டரி பள்ளி, நங்கநல்லூர்
1653. ஆ.மணிகண்டன், பதினொராம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, பண்ருட்டி
1654. எஸ்.ஏ.கே.ஃபாஜில், ஏழாம் வகுப்பு, ஏ.கே.ஹெச். மே.நி. பள்ளி, தூத்துக்குடி
1655. க.சந்தியா பாரதி, இரண்டாம் வகுப்பு, அசோக் லேலண்ட் பள்ளி, ஓசூர்
1656. ஜி.ஆர்.விக்ரம், நான்காம் வகுப்பு, பி.வி.எம். பள்ளி, பொள்ளாச்சி



1657. க.அருள், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1658. அ.ஜக்வந்தனேஸ்வரன், ஆறாம் வகுப்பு, புனித காணிக்கை அன்னை மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி
1659. அபிஷேக் ராஜன், மூன்றாம் வகுப்பு, விஜய் நர்ஸரி பள்ளி, சென்னை
1660. மு.ஹரிணி, முதல் வகுப்பு, டி.சி.எம்.எம். பள்ளி, ஈரோடு
1661. மு.ஸ்ரீஹரி, ஐந்தாம் வகுப்பு, எஸ்.எல்.எம். லட்சுமி அம்மாள் மெட்ரிக் பள்ளி, ஈரோடு
1662. ஆர்.அக்ஷத் கிருஷ்ணா, நான்காம் வகுப்பு, சிஷ்யா பள்ளி, ஓசூர்
1663. ஏ.மஹாலக்ஷ்மி, நான்காம் வகுப்பு, ரோஸ் மேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி
1664. வை.பத்மநாபன், ஆறாம் வகுப்பு, சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கரூர்
1665. கே.அம்சவர்ஷிணி, விஜய் நர்ஸரி பள்ளி, சென்னை
1666. சி.பரத், ஐந்தாம் வகுப்பு, பாரதி வித்யாலயா, அரூர்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....


புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1667. கார்த்தி கேசவன், ஏழாம் வகுப்பு, சௌடேஸ்வரி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, கோவை
1668. மு.ப்ரியதர்ஷிணி, பன்னிரண்டாம் வகுப்பு, சிருஷ்டி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பிரம்மபுரம்
1669. எம்.பிரகாஷ், எட்டாம் வகுப்பு, டி.ஏ.வி. மேல்நிலைப் பள்ளி, சென்னை
1670. ஜனா, கோகுலகிருஷ்ணன், பத்தாம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி, காட்டுமன்னார்குடி
1671. பா.வைகுந்த், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீசங்கரா பள்ளி, பம்மல்
1672. கே.நித்யா, இன்ஃபேன்ட் ப்ரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, விருத்தாசலம்
1673. பா.கவியரசு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், கருப்பம்புலம்
1674. எஸ்.எஸ். அரவிந்தன், ஆறாம் வகுப்பு, பண்ணாரியம்மன் வித்யாநிகேதன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சத்தியமங்கலம்
1675. பி.ஸ்ரீநிதி, ஜீவனா மெட்ரிக் பள்ளி, மதுரை



இது பெற்றோர்கள் கவனத்துக்கு...

பள்ளிகள் திறக்கின்ற நேரமிது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் நல்ல சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டால்தான், அவர்களால் படிப்பில் நன்றாகக் கவனம் செலுத்த முடியும். விளையாட்டு, உடற் பயிற்சி போன்றவற்றில் உற்சாகமாக ஈடுபட முடியும். ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பெரும்பாலான குழந்தைகள் போதுமான உணவைச் சாப்பிடுவதில்லை என்பதுதான் உண்மை.

பொதுவான உணவுகள்

அரசாங்கத்தின் 'பள்ளி சுகாதார அமைப்பு,' பள்ளிக்குச் செல்லுகின்ற குழந்தைகளுக்கு, எந்த உணவு எந்த அளவில் இடம் பெற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. அதன்படி அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு போன்ற தானிய உணவுகள் தினமும் 75 கிராம், பால், பருப்பு, முட்டை, இறைச்சி போன்ற வற்றிலிருந்து கிடைக்கும் புரத உணவு 30 கிராம், தயிர், வெண்ணெய் போன்ற கொழுப்பு உணவுகள் 8 கிராம், பச்சைக்கீரை வகைகள் 30 கிராம், மற்ற காய்கறிகள் 30 கிராம் இடம் பெற வேண்டும்.

கவனிக்க வேண்டியவை

இப்போதெல்லாம், மிகக் குறைந்த வயதிலேயே குழந்தைகள் பள்ளிக்குச் செல்லத் தொடங்கிவிடுகிறார்கள். புது இடம், புதிய சூழல் போன்றவற்றால் குழந்தைகள் சரியாகச் சாப்பிடுவதில்லை. ஆகவே, குறிப்பிட்ட நேரத்துக்குள் சாப்பிட்டு முடிக்க, வீட்டிலேயே குழந்தையைப் பழக்கப்படுத்த வேண்டியது பெற்றோர் கடமை. அடுத்து, தினமும் ஒரே மாதிரி உணவைக் கொடுத் தனுப்பக் கூடாது. விதம் விதமாக உணவு களைச் சாப்பிடுவதில்தான் குழந்தைகளுக்கு ஆர்வம் அதிகம். அதிலும், பெரியவர்களுக் குத் தயாரிக்கும் அளவுகளில் இல்லாமல், மினி இட்லி, குட்டி குட்டியாய் தோசை, முக்கோண வடிவில் சான்ட்விச் என்று வித்தியாசமாகச் செய்து கொடுக்கலாம். பல வண்ணங்களைக் கொண்ட உணவு களைச் சாப்பிடுவது குழந்தைகளுக்குப் பிடிக்கும். ஆகவே, உணவுகளில் பல வண்ணக் காய்கறிகளைத் துருவிப் போட் டுக் கொடுக்கலாம். தயிர் சாதம் போன்ற உணவுகளில்கூட, சாதத்தின்மேல் முந்திரிப் பருப்பு, திராட்சை போன்றவற்றை வைத்து அழகு படுத்திக் கொடுத்தனுப்பலாம்.

டாக்டர் கு. கணேசன்

நர்சரி மற்றும் பிரைமரி குழந்தைகளுக்கு


இந்த வயதில் காலை உணவு சத்தாக இருக்க வேண்டும். அதற்கு காரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு போன்றவற்றைத் துருவிப் போட்டு தயாரித்த இட்லி, இடியாப்பம், ஊத்தப்பம், தோசை, பருப்பு போட்டுத்

தயாரித்த பணியாரம், பாலுடன் கலந்து சாப்பிடும் கார்ன்பிளேக்ஸ் போன்றவற்றில் ஒன்று மாற்றி ஒன்று, காலை உணவாக இருக்கலாம். இட்லி, தோசை, ஊத்தப்பத்துக்குச் சாம்பார் மற்றும் கடலைச்சட்னி பயன்படுத்தலாம். மதிய உணவுக்கு அரிசி சாதம். இதனுடன் வேகவைத்த பருப்பு அல்லது சாம்பார் அரை கப், காரட், கீரை, பட்டாணி, பீட்ரூட், முட்டைக்கோஸ், காலிபிளவர், அவரை, புடலங்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய் போன்றவற்றில் ஒன்றை 2 மேஜைக் கரண்டிகள், காரட், தக்காளி, வெள்ளரி போன்றவற்றில் 2 துண்டு, தயிர்சாதம் கால் கப் கொடுத்தனுப்பலாம்.

தவிர, தினமும் 2 கப் பால், வாரத்திற்கு 4 முட்டைகள், தினமும் ஒரு கப் ஆரஞ்சு அல்லது ஆப்பிள் சாறு தரவேண்டும். சீசனுக்கேற்ப பழச் சாறுகளை மாற்றித் தரலாம். வேகவைத்த கொண்டைக்கடலை, சுண்டல், கடலைமிட்டாய், எள்ளுருண்டை, தேனில் ஊறவைத்த பேரீச்சம்பழம் போன்றவற்றை, மாலைநேரச் சிற்றுண்டியில் தரலாம். இரவில், காலை உணவைப் போலவே தரலாம். குழந்தையின் தனிப்பட்ட விருப்பத்துக்கேற்ப சில மாற்றங்களைச் செய்து கொடுத்தால், குழந்தைக்கு உணவின்மேல் ஆர்வம் இன்னும் அதிகரிக்கும்.

தரக்கூடாத உணவுகள்

குழந்தைகளுக்கு சிப்ஸ், சாக்லேட், ஐஸ்கிரீம், பீட்சா, பர்கர் போன்ற நொறுக்குத் தீனிகள், மென்பானங்கள் மற்றும் குளிர் பானங்களைத் தரக்கூடாது. இவை குழந்தையின் பற்களைப் பதம் பார்த்து விடும். அடுத்ததாக, கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, மீன் போன்றவற்றைத் தரக்கூடாது. இவற்றில் எலும்பு, முள், எலும்புச் சவ்வு போன்றவை இருக்க வாய்ப்புள்ளது. இவற்றைச் சாப்பிடுவதால் குழந்தைகளுக்குக் குடல் பாதிப்பு ஏற்படும்.



பத்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான உணவுகள்

இவர்கள் அதிக அளவு கலோரிகள் தரும் உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

அதே நேரத்தில் எல்லாச் சத்துகளும் அடங்கிய சமச்சீரான உணவாகவும் அது இருக்க வேண்டும். ஒரு கிலோ உடல் எடைக்கு 2 கிராம் புரதச் சத்துணவு தினமும் இவர்களுக்குத் தேவை. அதற்கு துவரம்பருப்பு, சோயா, பச்சைப்பயறு போன்ற பருப்பு உணவுகளையும், பால், தயிர் போன்ற பாலில் தயாரிக்கப்பட்ட உணவுகளையும் உண்ணலாம். முட்டை, இறைச்சி போன்ற அசைவ உணவுகளிலும் புரதம் உண்டு. இவற்றை வீட்டில் சமைத்துச் சாப்பிடுவதே நல்லது.

தினமும் இரண்டு வகைக் காய்கறிகள், பழங்களைச் சாப்பிட வேண்டியது முக்கியம். அப்போதுதான் இவர்களுக்குத் தேவையான வைட்டமின்களும் தாதுச்சத்துக் களும் கிடைக்கும். மாலை உணவில் சேவு, சீவல், முறுக்கு போன்ற நொறுக்குத் தின்பண்டங்களைத் தவிர்த்துவிட்டு, சத்து மாவுக் கஞ்சி, ரவை பாயாசம், வேர்க் கடலை, நிலக்கடலை உருண்டை, எள்ளு ருண்டை போன்ற சத்தான தின்பண்டங்களைச் சாப்பிட வேண்டும்.

உணவு அட்டவணை
(10 வயதுக்கு மேல்)

அதிகாலை : பால் 200 மி.லி.

காலை உணவு : இட்லி அல்லது தோசை அல்லது சப்பாத்தி அல்லது ரொட்டி மூன்று. இவற்றுக்கு மாற்று உணவாக உப்புமா சாப்பிடலாம். முட்டை ஒன்று. பால் 200 மி.லி.

பள்ளி இடைவேளை உணவு : கடலை மிட்டாய் அல்லது வெல்லமிட்டாய் மூன்று.

மதிய உணவு : அரிசி சாதம் இரண்டு கிண்ணம். பருப்பு ஒரு சிறிய கிண்ணம். ஒரு கப் தயிர். ஒரு காய், ஒரு கீரை.

மாலை உணவு : 50 கிராம் வேர்க் கடலை. வாழைப்பழம் ஒன்று அல்லது இரண்டு. பழரசம் 200மி.லி. அல்லது காய்கறி சாலட் 100கிராம்.

இரவு உணவு : காலை உணவு போல்.

இரவில் படுப்பதற்கு முன்பு : 200 மி.லி. பால்.

வாழ்த்துகள்!



பெயரைச் சொல்; பரிசை வெல் - 1ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.


சரியான விடைகள் :

1) ஆர்மடில்லோ, 2) எடிசன் அரண்டிஸ் (பீலே) 3) ப்ளூ மார்போ

பரிசு பெறுவோர் : 1) ரா.ஸ்ருதி, தஞ்சாவூர் 2) சோ.மயில்வாகனன், நாமக்கல் 3) த.ஆகாஷ்மாரி, கிருஷ்ணாபுரம் 4) எஸ்.ரேஷ்மா, காஞ்சிபுரம் 5) திருசிவசக்தி, திருப்பூர் 6) பி.ஏ.சச்சின், பெங்களூரு 7) என்.சம்பத்குமார், இராமநாதபுரம் 8) எஸ்.விவேக், திண்டுக்கல் 9) வாசவிசரண்யாஸ்ரீ, திருக்கோவிலூர் 10) மு.ப்ரியதர்ஷிணி, வேலூர்

மாத்தி யோசி!

கதை : இரா.கதிர்வேல், உ.எண் : 864. நம்பியூர்   படம் : பிள்ளை



“குழந்தை சாப்பிட்டு நாலு நாளாச்சு! தாயே! ஏதாச்சும் போடுங்கம்மா.” அந்தக் குரலைக் கேட்டுத் திரும்பினாள், சிறுமி இசக்கி. பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்தவர்களிடம் கையேந்திக் கொண்டிருந்தாள் ஒரு பெண். இடுப்பில் ஒரு குழந்தை! எண்ணெயே பார்த்திராத பரட்டைத் தலை. குழி விழுந்த கண்கள், வெறும் எலும்பும் தோலும்தான். அந்தத் தோற்றமே இசக்கி மனத்தை என்னவோ செய்தது. பார்க்க ரொம்பப் பாவமாயிருந்தது. பக்கத்துக் குடிசையில் போன வருஷம் இறந்துபோன குழந்தையின் ஞாபகம் வந்தது இசக்கிக்கு.

“பழைய சோறுதான் - பரவாயில்லையா...?” அந்தப் பெண்ணிடம் தனது சின்னத் தூக்குச் சட்டியைத் திறந்து காட்டினாள் இசக்கி.

“குடு தாயீ! நீ நல்லாயிருப்பே..!” என்று சட்டியை வாங்கி அதிலிருந்த நீர்த்த சோற்றை எடுத்து, குழந்தைக்கு ஊட்ட ஆரம்பித்தாள் அவள். பாவம்! எத்தனை நாள் பட்டினியோ? குழந்தை வேகமாய்ச் சோற்றை விழுங்கியது.

பாதிச்சட்டி சோறுதான் காலி. அதற்குள் பஸ் வந்துவிட்டது. தவித்தாள் இசக்கி தூக்குச் சட்டியையும் விட முடியவில்லை. பஸ்ஸையும்விட முடியவில்லை. அவள் தவிப்பையும் பதற்றத்தையும் சட்டை செய்யாமல் பஸ் ஓடி மறைந்தது.

‘போச்சு! இன்னிக்கு ஸ்கூலுக்கு லேட்டுதான். அடுத்த பஸ் வர அரைமணி நேரமாகும்.’ சாப்பிட்டு முடித்ததும், “கழுவலேன்னா பரவாயில்லை, குடு,” என்று தூக்குச் சட்டியை வாங்கிக் கொண்டாள்.

தூய இருதய உயர்நிலைப் பள்ளி. இசக்கி நுழைவதற்கு முன்பே, பிரேயர் முடிந்து மாணவர்கள் தத்தம் வகுப்புகளுக்குத் திரும்பிவிட்டிருந்தனர். லேட்டாய் வருபவர்களை விசாரித்துத் தண்டிக்க, வழக்கம்போல் உருட்டிய விழிகளுடன் நின்றிருந்தாள் சில்வியா சிஸ்டர்.

“பிரேயர் வகுப்பென்றால் உனக்கு அவ்வளவு இளக்காரமாய்ப் போச்சா, இசக்கி?” உறுமினாள் சில்வியா சிஸ்டர். ஏற்கெனவே பயத்தில் இருந்த இசக்கியின் கை கால்கள் இலேசாக நடுங்க ஆரம்பித்தன. கையிலிருந்த காலித் தூக்குச் சட்டி தவறி விழுந்தது. சட்டி ஒரு பக்கமும் மூடி ஒரு பக்கமுமாக ஓடின.

“ஸ்கூலுக்குக் காலிச் சட்டியோடதான் வருவியா? அதற்குள்ளேயே சாப்பிட்டியா? அப்ப மதியம் என்ன செய்வே..?” அதட்டினாள் சிஸ்டர்.

“இல்லே சிஸ்டர்...” இசக்கிக்கு வாய் குழறியது. “பஸ் ஸ்டாப்பில்...” என்று ஆரம்பித்து திக்கித் திணறிச் சொல்லி முடித்தாள். அவள் கண்களில் நீர் துளித்து விழத் தயாராய் நின்றது.

சில்வியா சிஸ்டர் திரும்பிப் பார்த்தாள். பிரேயர் ஹால் சுவரில் சிலுவையில்



தொங்கிக் கொண்டிருந்தது ஒரு மெலிந்த உருவம். அதன் முள் கிரீடத்துக்குக் கீழே கருணை பொழியும் விழிகள்; அதன் சிவந்த வாயில் ஒரு மெலிந்த புன்னகை. 'எனக்குப் பிடித்த பிரேயர் இதுதான்..' என்று அந்த ஏசுநாதர் திருவுருவம் சொல்லுவதுபோல இருந்தது.


சில்வியா சிஸ்டர் மெல்ல குனிந்து, காலித் தூக்குச் சட்டியையும் மூடியையும் எடுத்து இசக்கியிடம் நீட்டினாள்.

குட்டிக்கதை

"மத்தியானம் ஹாஸ்டல் ரூமுக்கு வந்து என்னோடு சாப்பிடு, இசக்கி.."

நடுங்கிக் கொண்டு நின்ற இசக்கி அந்த வார்த்தைகளைக் கேட்டு வியப்புடன் சிஸ்டர் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் கைகள் தாமாகவே நீண்டு காலித் தூக்குச் சட்டியை வாங்கிக் கொண்டன.



நெ. சண்முகவேலாயுதம்

விளையாட்டு

முரளி விஜய், தினேஷ் கார்த்திக், பத்ரிநாத், அஸ்வின் என நான்கு தமிழக வீரர்கள், இந்திய அணிக்காக இப்போது விளையாடி வருகிறார்கள். கடந்த இருபது வருடங்களில் நான்கு தமிழக வீரர்கள் இந்திய அணிக்காகத் தேர்வு செய்யப் பட்டது இதுவே முதல்முறை!

இந்திய அணியின் அடுத்த திராவிட், அடுத்த ஷேவாக் என்று இரு எதிர்ப் பார்ப்புகளும் இப்போது விஜய்மீது குவிந்திருக்கிறது. டெஸ்ட் போட்டியில் கிடைத்த வாய்ப்புகளில், நன்றாக ஆடியதால் திராவிட் ஓய்வுக்குப் பிறகு அவர் இடத்தை நிரப்ப விஜய் சரியானவர் என்று பேசிவந்தார்கள். இப்போது ஐபிஎல்-லில் இவர் அதிரடியைப் பார்த்தபிறகு, ஷேவாக்குக்கு இணையாகப் பேசப்படுகிறார்.

பல ஆண்டுகளாகக் காத்திருந்த சிறந்த ஆட்டக்காரருக்கு இப்போதுதான் டெஸ்ட் அணியில் இடம் கிடைத் திருக்கிறது. இந்தியாவுக்காக சில ஒரு நாள் போட்டிகளிலும் ஆடியிருக்கிறார். ஐபிஎல்தான் பத்ரிநாத்துக்குத் திருப்பு முனையாக அமைந்தது. அவர் ஆட் டத்தையும் மாற்றியிருக்கிறது. இந்திய டெஸ்ட் அணியில் பத்ரிநாத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

தோனிக்கு மாற்று தேவையிருக்கிற சமயத்தில், உடனடியாக நினைவுக்கு வருபவர் தினேஷ் கார்த்திக். இது வரை கிடைத்த அத்தனை சிறு வாய்ப்புகளிலும், தன் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார். கீப்பராக மட்டும் அல்லாமல், ஸ்பெஷலிஸ்ட் பேட்ஸ்மேனாகவும் அணியில் தேர் வாகியிருக்கிறார்.

அஸ்வின் - ஐபிஎல் கோப்பையை சென்னை அணி வெல்வதற்கு முக்கியக் காரணம், அஸ்வினின் பந்துவீச்சு. இந்திய 20-20 அணியில் இவர் தேர்வாகியிருக் கிறார். ஐபிஎல் வெற்றியைத் தொடர்ந்து தோனியின் நம்பிக்கையைப் பெற்றுவிட் டார். இனிவரும் காலங்களில், ஹர்பஜ னோடு இணைந்து அஸ்வின் பந்துவீசு வதை நிறையக் காணவிருக்கிறோம்.

இப்போது விஜய், அஸ்வின், தினேஷ் கார்த்திக் மூவரும் முத்தரப்பு போட்டிக்குத் தேர்வாகியுள்ளார்கள்.

முகுந்த், அனிருத் ஸ்ரீகாந்த், ஆஷுக் ஸ்ரீனிவாஸ் ஆகிய வீரர்கள், அடுத்தடுத்த வருடங்களில் தேர்வு செய்யப்படலாம். இந்தியத் தேர்வுக்குழுவின் தலைவராகத் தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீகாந்த் இருப்ப தால், தமிழக வீரர்களின் திறமை வெளி யுலகுக்குத் தெரிய வருகிறது.

ச.ந.கண்ணன்

நியூ

தினேஷ் கார்த்திக்




அஸ்வின்



சுரேஷ் ரைனா

அநிருத் ஸ்ரீகாந்த்



ஆஷுக் ஸ்ரீநிவாஸ்



பத்ரிநாத்



ஸ்டார்ஸ்!



கலர் பாக்ஸ் பரிசு!


'எனக்குப் பெரிய கலர் பாக்ஸ் வேணும். கலரில் புக் வேணும்' என்று எப்போதும் அப்பாவும் அடம் பிடிப்பேன். ஒவ்வொரு முறையும் அப்பா ஒரே பதில்தான் சொல்வார். 'நீ நல்லா படம் வரைஞ்சு பழகு. அதை ஏதாவது பத்திரிகைக்கு அனுப்புவோம். அதுல நீ வரைஞ்ச படம் வந்தா, நீ நல்லா வரைய ஆரம்பிச்சுட்டேன்னு அர்த்தம். அப்புறமா நீ கேட்பதை வாங்கித் தரேன்'. அப்பா சொன்னது சரிதான். அதனால், தீவிரமாகப் பயிற்சி செய்தேன். ஒரே மாதத்தில், என் வரைதலில் மாற்றம் தெரிந்தது. அதன் பிறகு அதை பத்திரிகைக்கு அனுப்பினேன். சில நாட்கள் சென்றபின்... ஊரிலிருந்து வந்த அப்பா என்னிடம் பெரிய கலர் பாக்ஸையும், கலரிங் புத்தகத்தையும் நீட்டினார். சந்தோஷமாகப் பெற்றுக் கொண்டேன். அதைத் தொடர்ந்து அப்பா ஒரு புத்தகத்தை நீட்டினார். அதில் நான் வரைந்த ஓவியம் வெளியாகியிருந்தது. அந்த சந்தோஷத்தை என்னால் என்றும் மறக்க முடியாது.

- **ஆர்.ஐஸ்வர்யா,**
உ. எண் 619, ஈரோடு

சைக்கிள் ஓட்ட வேண்டும் என்பது அம்மாவின் நீண்ட நாள் ஆசை. ஆனால், கீழே விழுந்து ஏதும் அடிபட்டால் வீட்டு வேலைகள் எல்லாம் பாதிக்குமே என்று கற்றுக் கொள்ளவேயில்லை. அம்மாவின் விருப்பம் எனக்குத் தெரியும். அதனால், ''உன்னால் முடியும். ஒன்றும் ஆகாது. டிரை பண்ணும்மா'' என நான் சொல்லிக் கொண்டே இருப்பேன். அம்மா, மறுத்து விட்டாள். சில நாட்கள் சென்றுவிட்டன. ஒரு நாள் விடிகாலையில், அம்மாவின் குரல் கேட்டது: ''ப்ரியா, சீக்கிரம் ஓடி வந்து பார்'' தூக்கக் கலக்கத்தில் இருந்த எனக்கு சட்டென்று புரியவில்லை. ஒரு நிமிஷம் கழித்து வாசல் பக்கம் வந்தேன். அம்மா சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தார்கள். நான் பள்ளி செல்லும் அதே சைக்கிள்! 'நீ சொன்ன மாதிரியே தினம் அதிகாலைல பிராக்டிஸ் பண்ணேன்' என்றாள் உற்சாகமாக. அம்மா சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டது எனக்கு சந்தோஷம்தான். அதைவிட, கற்றுக் கொள்வதில் ஆர்வத்தை ஏற்படுத்தும் தூண்டு

கோலாகச் செயல்படுவது எனக்கு மிகப் பெரிய சந்தோஷமாகத் தெரிகிறது.

- இர.பிரயதர்ஷிணி,
உ. எண் 1089, அரியலூர்



பள்ளியிலிருந்து வீடு திரும்பிய எனக்கு அதிர்ச்சியாயிருந்து. பக்கத்து வீட்டு நாய் ஜிம்மியின் காலில் ஏதோ அடிபட்டிருந்தது. அது நகர முடியாமல் முனகியபடியே எங்கள் வீட்டின் கேட்டுக்கு வெளியே படுத்து முனகிக் கொண்டிருந்தது. பொதுவாகவே, எனக்கு நாய் என்றால் பயம். என்றாலும், அடிபட்டு முனகிய நிலையில் அப்படி நினைக்கத் தோன்றவில்லை.

ஏனோ தெரியவில்லை. கேட்டைத் திறந்து 'உள்ளே வா' என்றேன். மெதுவாக ஊர்ந்து வந்து படுத்துக் கொண்டது. அம்மாவிடம் சொல்லி, உணவும் பாலும் கொண்டு வந்து கொடுத்தேன். வேகமாய் சாப்பிட்டது. நடு நடுவே காலை நாவால் நீவியது. அதைப் பார்க்கப் பார்க்க என் கண்களும் கலங்கின. என்னைப் பார்த்த அப்பா, எங்கோ போய் ஒரு களிம்பை வாங்கி வந்தார். அதை தாலில் தடவினார்.



ஒரே வாரத்தில் குணமாகிவிட்டது. ஊருக்குப் போயிருந்த பக்கத்து வீட்டினர், வந்து பார்த்து ஆச்சர்யப்பட்டுப் போனார்கள். காரணம், எப்போதும் என்னைத் துரத்தும் ஜிம்மிதான் இப்போது எனக்கு காவல்! நம்முடைய செயலால் எந்த நிலையையும் நமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடியும் என்று எனக்குப் புரிய வைத்தது இந்த நிகழ்ச்சிதான். என்னை நெகிழ வைத்து சந்தோஷப்படுத்தும் நிகழ்ச்சி இது.

- எம்.எஸ்.ஷண்முகப்ரியா,
உ. எண் 622, சேலம்


நூறு வழி!

கதை : மா.பிரின்சி ஜெஸிகா, உ.எண் : 1547. தேவகோட்டை
படம் : பிள்ளை



கடிதமாலை

நேர்த்தியான கற்பனை!




● 'சைக்கிள் வேணும்', 'அம்மாவின் ஆசி' போன்ற சிறுகதைகள் அற்புதம். புதிர் மூளைக்கு வேலையாக இருந்தது. 'ஆரஞ்சு நிலா' என்னை வானிற்கே கூட்டிக் கொண்டு போனது. - **மு.நாகார்ஜுன், உ. எண் 1249, ஈரோடு** ● 'கடவுளின் தேசம்' கேரளா பற்றிய விஷயங்களைத் தெளிவுபடுத்தியது. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை** ● மெய்மறந்து தூங்கிய குல்லா வியாபாரியின் முகத்தில், குளிர் ஜலம் தெளித்து விழிப்பூட்டிய வானரத்தின் பகுத்தறிவுச் செயல், வியக்கச் செய்கிறது. வளர்கவியின் வளமுறு இக்கதைப்பாடல் பிறர்க்குதவும் பண்பினைக் கற்றுத் தருகிறது. - **இனாம் கேசவன், குருமலை** ● விடுமுறையில் ஊர் சுற்றி வரமுடியாதவர்கள்கூட அவரவர் ஊரைப் பற்றிய தொகுப்பை தாருங்கள் என்ற கேட்ட கோகுவின் தலையங்கம் பலே! - **ஆர்.ஜி.ஜே. ஜெய்ஹரிதா, திருவொற்றியூர்** ● பெயர்க் காரணம்' புதிய பகுதியைப் படித்தேன். புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. - **எம்.மிருணாளினி, உ. எண் 1567, மதுரை** ● நாட்டியக் கலையின் மூலம் திருப்புகழ், ராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை நடத்தி, சிறுவர் சிறுமிகளின் உள்ளத்தில் நல்ல பண்புகளை விதைத்து வரும் ரமணி வெங்கடேசன் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர். - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்** ● மனித வாழ்வில் சகிப்புத் தன்மை என்பது என்ன? என்பதை சுவாமி விவேகானந்தர் மூலமாக சம்பவம் பகுதியில் எடுத்துச் சொல்லியிருந்தது மிக நன்று. - **எம்.சிவரஞ்சனி, உ. எண் 179, திருவாரூர்** ● 'பேசும் பறவை' கிளி களைப் பற்றிய கட்டுரை அருமையாக இருந்தது. - **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை** ● 'நல்ல நாள்' படக்கதை அறிவும் தந்திரமும் இருந்தால் ஆபத்திலிருந்து தப்பிக்கலாம் என்பதை உணர்த்தியது சூப்பர்! - **ஆர்.ஆர்.உமா செல்வமருதூர்** ● அரிஸ்டாட்டிலைப் பற்றிய அபூர்வத் தகவல்களை 'தெரியுமா?' பகுதியில் தெரிந்து கொண்டோம். மருத்துவர் கொடுத்த கோடை கால உணவு டிப்ஸ் மிக்க பயனுள்ளது. 'கலகலா காலனி'யில் வெடித்த சிரிப்பு பாம் வயிற்றை நன்கு பதம் பார்த்து விட்டது. - **நெல்லை த.ஞானசெல்வன், மும்பை** ● நல்ல பண்புகளை வளர்த்து வரும் 'காஞ்சி காமகோடி நாட்டியாலயா'வின் பணி பாராட்டுக்குரியது. அட்டைப்படம், மனத்தைக் கொள்ளை கொள்ளும் ஸ்டில்! - **ஏ.ஜி. சாய்சுதா, ஸ்ரீரங்கம்** ● 'வயிற்று வலி' கதை பிரமாதம். அந்த ஆசிரியரின் தாய்மைப் பண்பை நினைத்துக் கண்கலங்கி விட்டது. - **ஆர்.பிருந்தா, மதுரை** ● தலையில் தேங்காய் விழுந்தாலும் வலிக்காதது போல் ஜம்புவை விரட்டிய ஆதியைப் பாராட்டுவதா? இல்லை எதற்கும் அசராத ஜம்புவைப் பாராட்டுவதா? என்றே தெரியவில்லை. அற்புதம். ஆதி படக்கதை. - **ந.பிருந்தா, உ. எண் 1098, மயிலாடுதுறை**

பெயரைச் சொல்; பரிசை வெல் - 3







1. ______________ 2. ______________ 3. ______________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி: ....

....

வீட்டு முகவரி: ....

.... பின்கோடு ....

போட்டி
பரிசு
ரூ.1000/-



கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.6.2010

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1651


1652


1653


1654


1655


1656


1657


1658


1659


1660


1661


1662


1663


1664


1665


1666


1667


1668


1669


1670


1671


1672


1673


1674


1675

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

